# பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள்

ஒரு தகப்பனானவர், தன்னுடைய மகனானவனுடைய பதினெட்டாவது பிறந்தநாளன்று, அதி நவீனமான விலையுயர்ந்த கைதொலைபேசி சாதனத்தை பரிசுப்பொருளாக கொடுத்திருந்தார். அதைப் பெற்றுக் கொண்ட மகனானவனுடைய மனதிலே பேரானந்தம். அந்த செய்தியை தன் நண்பர்களோடு பகிர்ந்து கொண்டான். அந்த சாதனத்தை அவன் எப்போதும் தன்னோடு வைத்துக் கொள்வான். மகனானவனைப் பொறுத்த வரையில் அது அவனுக்கு கிடைத்த ஆசீர்வாதமாக இருந்தது. ஆனால் அது ஆசீர்வாதம் என்பது அந்தப் பரிசுப் பொருளின் முதற்பகுதி. அதன் இரண்டாவது பகுதியானது, அவன் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதத்தை தன் வாழ் விலே நன்மையுண்டாகும்படி உபயோகம் செய்ய வேண்டுமெனபதே. தவறான காரியங்களுக்கும், கல்வி கற்க்கும் நாட்களிலே நேரத்தை விரயம் செய்யாதபடிக்கும், தன் ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்ளாதபடிக்கும் காத்துக் கொள்ள வேண்டும் என்று தகப்பனானவர் தன் மகனானவனுக்கு அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார். இந்தப் பூமியிலே வாழும் தேவ பிள்ளைகளும், இந்தப் பூமிக்குரிய சில ஆசீர்வாதங்களை தங்கள் பரம பிதாவினிடத்திலிருந்து பெற்றுக் கொள்கின்றார்கள். அது உயர் கல்வியாக இருக்கலாம் அல்லது அருமையான வேலையாக இருக்கலாம். இவை யாவும் இந்த உலகத்தின் ஐசுவரியத்தை பெருக்குவதற்கே வழிவகுக்கின்றது. அதைக் குறித்து தேவ பிள்ளைகள் சபை நடுவே சாட்சி பகர்ந்து கொள்கின்றார்கள். அது ஆசீர்வாத்ததின் முதற் பகுதி. இரண்டாவது பகுதியாக, அந்த ஆசீர்வாதத்தை கொடுத்த தேவனானவர் அவைகளை எப்படி உபயோகிக்க வேண்டும் என்ற அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் தெளிவாக கொடுத்திருக்கின்றார். எனவே நாம் தேவனால் பெற்ற ஆசீர்வாதங்களை குறித்து சந்தோஷமடைவதோடு நிறுத்திவிடாமல், அவைகளை எப்படி நாம் ஆளுகை செய்ய வேண்டும் என்பதைக் கு றித்து சத்திய வேதம் கூறும் ஆலோசனைகளின் வழியிலே நாம் வாழ வேண்டும். ஆசீர்வாதங்களை நாம் நம் சொந்த வழிகளால் சாபமாக்கிக் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். எனவே நாம் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை எப்படியாக உபயோகின்றோம் என்பதைக் குறித்து மிகுந்த விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**நீதிமொழிகள் 4:13**

**புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக்காத்துக் கொள், அதுவே உனக்கு ஜீவன்.**

**ஜெபம்:** என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, நான் உம்மிடத்தில் பெற்றுக் கொண்டவைகளை உம்முடைய வார்த்தையின்படி காத்துக் கொள்ளும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்விலே நிறைவு வேண்டும்

> **சங்கீதம் 19:7**
>
> கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது;

ஒரு குழந்தையானது பிறந்து பல பருவங்களை கடந்து செல்கின்றது. இன்றைய உலகிலே சிறுவர்கள் ஆரம்ப கல்வியைக் கற்கும்படி பாலர் பாடசாலைக்குச் செல்வது பெற்றோருடைய வாழ்க்கையிலே மிக முக்கியமான நாளாக இருக்கின்றது. அவர்கள் வளர்ந்து வாலிப பருவத்தை அடைகின்றார்கள். இப்படியாக, கல்வியை முடித்து, வேலை செய்கின்றார்கள். பின்பு வாழ்க்கைத் துணையை தேடி திரு மணம் செய்து கொண்டு, தங்களுக்கென்று ஒரு குடும்பத்தை அமைத்துக்கொள்கின்றார்கள். இந் நிலையிலே அவர்களை வளர்த்த பாட்டானார், பாட்டி மற்றும் பெற்றோர் வயோதிப நிலையை அடைகின்றார்கள். இந்த வாழ்க்கை வட்டத்திலே, மகிழ்ச்சியான நாட்கள், துக்கமான நாட்கள், பெலனுள்ள நாடகள், பெல னற்ற நாட்கள், ஆரோக்கியமான நாட்கள், நோயுற்று வாழும் நாட்கள், குடும்பத்தைக் குறித்து திருப்தியான நாட்கள், ஏமாற்றமடையும் நாட்கள், மன வேதனையின் நாட்கள், சோதனைகளை கடந்து செல்லும் நாட்கள், மேன்மையடையும் நாட்கள், அவமானமடைந்து தாழ்த்தப்படும் நாட்கள் என்று எண்ணற்ற அனுபங்களை அவர்கள் கடந்து செல்கின்றார்கள். தங்கள் வாழ்க்கையை திரும்பிப் பார்த்து, இது இப்படியாகும் என்று எனக்கு தெரிந்திருந்தால் அல்லது யாரும் கூறியிருந்தால், நான் மதியீ னமான தீர்மானங்களை எடுத்திருக்க மாட்டேன் என்று பலர் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். எந்தக் காலத்திலும், எந்த நேரத்திலும், எல் லாப் பருவங்களிலும் தேவன் அருளியசத்திய வேதமானது நமக்கு நிறை வான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தெளிவாக கூறுகி ன்றது. சகலத்தையும் படைத்த சர்வ வல்ல தேவனாகிய கர்த்தரின் வார் த்தையின்படி வாழ்ந்தால் அதனால் உண்டாகும் நன்மைகள் என்னவெ ன்றும், தேவ வார்த்தைகளை தள்ளிவிட்டு, மனிதர்களின் எண்ணப்படி வாழ்ந்தால் அதனால் உண்டாகும் வேதனைகள் என்ன என்பதை, சத் திய வேதமானது துல்லியமாக வகையறுத்து கூறுகின்றது. ஆத்துமா வானது கலங்கி தியங்குகின்ற வேளையிலே, ஆத்துமாவானது மண் ணோடு ஒட்டிக்கொள்ளாதபடிக்கு, தேவன்தாமே தம்முடைய வார்த் தையை அனுப்பு ஆத்துமாவை உயிர்ப்பிக்கின்றார். சத்தியவேதம் நிறை வானது. நிறைவான வாழ்க்கையை வாஞ்சிப்பவர்கள் அதைப் பற்றிக் கொள்கின்றார்கள். நாமும் எல்லா சூழ்நிலைகளிலும் அவருடைய வார்த் தையின் வழியில் வாழ நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

> **ஜெபம்:** எக்காலத்திலும அடைக்கலமாயிருக்கின்ற என் தேவனே, ஒரு நாளும் உம்மை மறந்து போகாமல், எல்லா பருவங்களிலும் நான் உம்மை நம்பி, உம்முடைய வார்த்தையின் வழியில் வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# போகும் வழிதெரியவில்லை

ஒரு கப்பலானது சமுத்திரத்தின் நடுப்பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, திடீரென்று கார்மேகங்கள் தீவிரமாய் சூழ்ந்து கொண்டது. சடுதியாக புயல்காற்று வீச ஆரம்பித்தபோது, கப்பலிலிருந்த பயணிகளையும், வேலையாட்களையும் பயமானது புகைக்காட்டைப்போல சூழ்ந்துகொண்டது. கொந்தளிக்கும் தண்ணீரிலே வழிதெரியாதிருந்த போது, கப்பலின் தளபதி, திசைகாட்டிக் கவிருவையைப் பார்த்து, கப்பல் செல்லவேண்டிய துறை முகத்தை நோக்கி, கப்பலை மெதுவாக ஓட்டிச் செல்லும்படி மாலுமிக்கு பணிப்புரை கொடுத்தான். கடும் புயல் காற்று மத்தியிலும், கப்பலானது தாபரிக்க வேண்டிய நகரத்தின் துறைமு கத்தை சென்றடைந்தது.

**சங்கீதம் 32:8**

**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்.**

நம்முடைய வாழ்க்கையின் சூழ்நிலைகளும், சமுத்திரத்தின் நடுவிலே கடும் புயல் காற்றில் அகப்பட்ட கப்பலைப் போல திடீரென்று மாறிவிடுகின்றது. கழுகுகள் பிணத்தை சுற்றி வட்டமிடுவதைப் போல, நம்முடைய வீழ்க் கையை எதிர்பார்த்திருந்த எதிரிகளும் சூழ்ந்து கொள்கின்றார்கள். அவர்கள் ஆலோசனைபண்ணி, அபத்தம்பேச விரும்புகிறார்கள். தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள். நம்பியிருந்தோரும் உதவ முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுப் போய் விடுகின்றார்கள். வழிதெரியாது தவிக்கும் வேளையிலே யார்தான் நமக்கு உதவமுடியயும் என்ற ஏக்கம் உள்ளத்தை கலங்கடித்து விடுகின்றது. அவ்வேளையிலே நம்முடைய ஆத்துமா நமது தேவனையே நோக்கி அமர்ந்திருக்கும் போது, நம்முடைய வாழ்க்கையின் தளபதியாகிய ஆண்டவர் இயேசுவின் வார்த்தையானது திசைகாட்டியைப் போல நாம் செல்லும் வழிகளை காண்பிக்கின்றது. அதுமட்டுமல்லாமல், காரிருளில் உதிக்கும் தீபம் போல, அவருடைய வசனம் நம் பாதைக்கு வெளிச்சமாக மாறிவிடுகின்றது. பிரியமான சகோதர சகோதரிகளே, உங்கள் வாழ்க்கையை அழுத்தும் சூழ்நிலைகளைக் கண்டு நீங்கள் பயப்படும் நாளிலே, கர்த்தரை நம்பியிருங்கள். தேவ பக்தன் பாடியது போல, தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று மனத்தாழ்மையோடும், விசுவாசத் தோடும் அறிக்கையிடுங்கள். நாம் தேவனுக்கு முன்பாக ஜீவனுள்ளோருடைய வெளிச்சத்திலே நடக்கும்படி, அவர் நம்முடைய ஆத்துமாவை மரணத்துக்கும் நம் கால்களை இடறலுக்கும் தப்புவித்து நடத்தவது நிச்சயம்.

**ஜெபம்:** அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும் தேவனே, என் ஆத்துமாவை உம்மிடத்தில் உயர்த்துகின்றேன். நான் நடக்க வேண்டிய வழியை எனக்கு காண்பித்து என்னை அதிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஞானவான்கள் யார்?

நாங்கள் தீர்க்கதரிசனங்களை அறிந்திருக்கின்றோம். நாங்கள் தேவன் கொடுத்த வேத பிரமாணங்களை நன்றாக ஒழுங்கு முறைப்படி கற்றி ருக்கின்றோம் என்று சிறப்புக் குழுக்களை சேர்ந்த சதுசேயர், பரிசேயர், வேதபாரகர்கள் தங்களைக் குறித்து மேன்மைபாராட்டினார்கள். ஆனால் அவர்கள் வேத பிரமாணம் எடுத்து கூறும் மீட்பராகிய இயேசுவை அறி யாது போனார்கள். இவர்கள் தங்களை ஞானிகள் என்று கூறிக்கொண்ட போதிலும், ஆண்டவர் இயேசுவை அறியாது போனதினால், அவர்கள் தேவனுடைய பார்வையிலே பேதமையுள்ளவர்களாகவே காணப்பட் டார்கள். ஆனால், இந்த உலகத்தின் அளவுகோலின்படி வேத பிரமாண ங்களை கற்றுத் தேறாதவர்களாகிய ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள், இந்த உலகத்தின் ஞானிகளால், பேதமையுள்ளவர்கள் என்று கருதப்பட்ட போதும், அவர்கள் ஆண்டவர் இயேசு யார் என்பதையும், அவர் எங்கிருந்து வந்தார் என்பதையும் குறித்து நிறைவான அறிவுள்ளவர்களாக இருந்தார்கள். இந்த அறிவு யாரால் உண்டானது? ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக: நீர் ஜீவனுள்ள தேவ னுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான் மாம்சமும் இரத் தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிரு க்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். ஆம், தங்களை தேவனு டைய சத்திய வார்த்தைக்கு ஒப்புக்கொடுத்து, மனத்தாழ்மை யோடு வேத வார்த்தைகளை ஏற்றுக் கொள்கின்ற யாவ ரும், ஆண்ட வர் இயேசு யார் என்பதை அறிந்து கொள்கின்றார்கள். ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலக த்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? ஒருவனும் சுய ஞானத்தினால் ஆண்டவர் இயேசுவை அறிய முடியாது. ஆனால் வேத வார்த்தைகளோ, பேதைகளையும் மெய்ஞானமுள்ளவர்களாக மாற்றுகி ன்றது. இந்த உலகஞானம் அழிந்து போகும். ஆனால் தேவஞானமே மெய்யான ஞானம். எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர் களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். எனவே தேவனுடைய சமுகத்திலே உங்களை தாழ்த்தி வேத வார்த்தைகளை தியானியுங்கள். அவரை அறிகின்ற அறிவிலே வளருங்கள்.

**சங்கீதம் 19:7**

**கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.**

**ஜெபம்:** ஞானத்தின் ஆவியை அருளும் தேவனே, நான் இந்த உலகத் தினால் உண்டாகும் ஞானத்தை நாடாமல், மெய்யான தேவ ஞானத்தை நாடித்தேடும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அறிவு பெருத்தவன்

நாளுக்கு நாள் நவீனமடையும் உலகம். அதிவேகமாக விருத்தியடையும் தொழில்நுட்ப வளர்ச்சி. மனிதகுலத்தைத் வியக்கவைக்கும் விஞ்ஞானம். மனித ஆற்றல்களை பிரதிபலிக்கும் இயந்திரங்கள். இப்படியாக இந்த உலகத்தின் போக்கை பார்த்து ஆச்சரியப்படுகின்றீர்களா? இவைகளை அறியாத மனிதர்கள் அற்பமானவர்களும், கல்லாதவர்களும் என்று எண்ணப்படும் காலத்திலே வாழ்கின்றோம். இந்த வளர்ச்சிகளினாலே மனிதர்களுக்கு பிரயோஜனம் உண்டு. அதே வேளையிலே பாதகமான பக்கவிளைவு இல்லாத மனிதனுடைய ஆக்கம் எதுவுமேயில்லை. சில தேவ பிள்ளைகளும்கூட தேவனுடைய ஞானத்தைவிட இந்த உலகத்தின் ஞானத்தை தங்கள் வாழ்விலே மேன்மைப்படுத்தி வஞ்சிக்கப்பட்டுப் போகும் காலமாக இருக்கின்றது. மனிதனுடைய ஆக்கங்களின் முடிவு என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். இந்தப் பூமிக்குரியவைகள் யாவும் அழிந்து போகும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. நம்முடைய சரீரமும் மண்ணாக இருக்கின்றபடியால், அது ஒருநாள் மண்ணுக்கே திரும்பும். பரலோகத்திற்குரியவைகள் நித்தியமானவைகள். ஒரு மனிதனானவன் இந்த உலகத்திலுள்ளவைகள் யாவற்றையும் தனதாக்கிக் கொண்டாலும் அவன் தன் ஆத்துமாவிற்கு கேடு விளைவித்தால் அதனால் அவனுக்கு இலாபம் என்ன? தேவனுடையவர்கள், தேவனுடையவைகளைத் தேடுகின்றார்கள். இந்தப் பூமியில் உயிர்வாழ தேவையானவைகளை மட்டுமே தங்கள் பிழைப்பிற்காக எடுத்துக் கொண்டு, தங்கள் நாட்களை அழியாததும், வாடாததுமான நித்திய வாழ்விற்குரியவைகளை வாஞ்சித்து தேடுகின்றார்கள். இந்த உலக ஞானிகள் அப்படிப்பட்டவர்களை பார்த்து பைத்தியமானவர்கள் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். இந்த உலக அறிவை மேன்மைப்படுத்தி, அதை நாடித்தேடி வாழும் மனிதர்கள், இந்த உலகத்தின் போக்கின்படி வாழும் மனிதர்களுக்கு ஞானவான்களாகவே தோன்றுகின்றார்கள். மனிதனுடைய ஆவி பிரியும் நாளிலே அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான் அந்நாளிலே அவன் யோசனைகள் யாவும் அவனோடுகூட அழிந்துபோம். உலக அறிவிலே தேர்ச்சி பெற்றவனாக இருந்தாலும் அல்லது உலக அறிவைக் குறித்து ஒன்றுமே அறியாதவனாக இருந்தாலும், தேவனாகிய கர்த்தரை அறிந்து, அவர்மேல் தன் நம்பிக்கையை வைத்து அவருடைய வார்த்தையின் வழியிலே வாழ்பவன் பாக்கியம் பெற்றவனாக இருக்கின்றான். அவன் நித்திய நித்தியமாய் தேவனோடுகூட வாசம் பண்ணுவான்.

**சங்கீதம் 146:5**

**தன் தேவனாகிய கர்த்தர் மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான்.**

**ஜெபம்:** என் பிதாவாகிய தேவனே, நான் உம்மையும், உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவையும் அறிகின்ற அறிவிலே வளர்ந்து பெருகுவதையே எப்போதும் வாஞ்சித்து தேட என்னை உணர்வுள்ளவனாக்குவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தில் சந்தோஷம்

ஒரு உற்பத்தி நிலையத்திலே பொருத்தப்பட்டிருந்த பிரதானமான இயந் திரத்தை பரிபாலனம் செய்வதற்காக வந்த ஒரு தொழிநுட்ப வல்லுனர், அந்த இயந்திரத்தை பரிசோதித்து பார்த்த பின்பு, அந்த இயந்திரமானது எந்த இடையூறுமின்றி, நூற்றுக்கு நூறு திறனுடன் இயங்குவதாக அறி க்கையை சமர்பித்தார்.அந்த உற்பத்தி நிலையத்தின் அதிகாரி, அந்த இயந்திரத்தை ஆக்கியோனின் கைநூலிலுள்ள வழிமுறைகளின் படி நன்றாக பேணிப் பராமரித் ததால், அந்த இயந்திரம் இயங்க வேண்டிய பிரகாரமாக திறம்பட இயங்கி வந்தது. இந்த உலகத்திலே வாழும்நாம் ஒவ்வொரு வரும் பல் வேறு விடயங்களிலே வேறுபட்ட வர்களாக இருக்கின்றோம். எடுத் துக் காட்டாக, சிலர் சரீரத்திலே அதிக பெலனுள்ளவர்க ளாக இருக்கி ன்றார்கள். வேறு சிலர் பேச்சிலே சமார்த்தியமுள்ளவர்க ளாக இருக்கி ன்றார்கள். இப்படியாக பல வேற்றுமையகள் காணப்ப ட்டாலும், நாம் ஒவ்வொருவரும் கர்த்தருடைய கரத்தின் கிரியைகளாக இருக்கின்றோம். நம் ஒவ்வொருவருக்கும் தனித்துமான திட்டத்தை தேவன் வைத்திரு க்கின்றார். ஒவ்வொரு மனிதனானவனும், தன்னை உருவா க்கினவ ருடைய திட்டத்தை நிறைவேற்றும் போதே, அவன் இந்தப் பூமி யிலே வாழ வேண்டிய பிரகாரமாக வாழ்கின்றான். பரிசுத்த வேதாக மமே நம்மை உருவாக்கினவருடைய கைநூலாக நமக்கு இருக்கின்றது. அந்த பரிசுத்த வேதாகமமானது மனிதனானவன் எப்படி எல்லா சூழ்நிலைக ளிலும் மனமகிழ்ச்சியுள்ளவாக முடியும் என்பதின் இரகசியத்தை வெளி ப்படுத்துகின்றது. கர்த்தருடைய நியாயமே சத்தியம். அவருடைய நியா யங்கள் நித்தியமானவைகள். அவருடைய நியாயங்கள் உத்தமமானவை கள். அந்த நியாயங்கள் மனிதன் செல்ல வேண்டிய வழியை போதிக்கி ன்றது. அதிலே நடக்கின்றவர்கள் நேரிய வழியை தெரிந்து கொள்கின் றார்கள். அவருடைய நியாயங்கள் உள்ளும் புறமும் மனிதன் எப்படி யாக நேர்த்தியாக இருக்க வேண்டும் என்பதை போதிக்கின்றது. அந்த நியாயங்களை தவறி நடக்கும் வேளைகளிளெல்லாம் இருத யத்திலே வேதனைகள் உண்டாகும். நம்மை உருவாக்கினவ ருடைய நியாயங்க ளிலே நாம் நம்மை பூரணமாக ஒப்புக் கொடுக்கும் போது இருதய த்திலே சந்தோஷம் உண்டாகின்றது. எனவே அவருடைய செம்மையாக நியாயங்களின் வழியிலே வாழ நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**சங்கீதம் 19:8**

கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக் கிறது;

**ஜெபம்**: என்னை உருவாக்கிய தேவனே, உமது நியாயங்கள்மேல் என் ஆத்துமா எக்காலமும் வாஞ்சையாக இருக்கும்படிக்கு அவைகளின் மேன்மையை நான் உணரும்படி எனது மனக்கண்களை பிரகாசிப்பீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரகாசமுள்ள மனக்கண்கள்

ஒரு விசுவாசியானவன், மாலை வேளையிலே தெரு வழியாக வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது, தன் குடும்பத்திலே இருக்கும் பல தேவைகளையும், அவைகளைத் தான் எப்படி சந்திக்கப் போகின்றேன் என்பதைக் குறித்து சிந்தித்தபடி சென்று கொண்டிருந்தான். அந்த விசு வாசிக்கு முன்பாக சென்ற மனிதனொருவர் தன் சட்டைப் பைக்குள் வைத் திருந்த பணத்தை கீழே தவறுதலாக விழுத்திவிட்டு, போய்கொண்டிரு ந்தார். விசுவாசியானவன் அந்த இடத்தை கடந்து செல்லும் போது, கணி சமான தொகையுள்ள பணக்கட்டுக்களானது அங்கே விழுதிருப்பதை கண்டான். அந்த மனிதனானவர் சற்று தொலைவிலே முன்னாக சென்று கொண்டிருந்தார். தெரு விலே வேறு யாரும் இல்லை. அவன் தன் கண்கள் கண்டதை தன்னை அறியாமலே இச்சித் தான். எனினும், அவனு டைய உள்ளான மனிதனிலிருந்து "நீ வானம் பூமி படைத்த பிதாவாகிய தேவனுக்கு பிள்ளை" என்று சத்தம் தொனித்தது. அவனுடைய சுத்தமச்னசாட்சி அவன் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது. உடடினடையாக அவன் தன் சிந்தையை மாற்றிக் கொண்டு, அந்தப் பணக்கட்டை தனக்கு முன்பாக சென்று கொண்டிருந்த மனிதனிடம் கொடுத்து விட்டான். "என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை" என்று பிரசங்கி கூறினார். கண்களின் இச்சை பரம பிதாவினால் உண்டானதல்ல அது இந்த உலகத்தினால் உண்டானது. மனிதனுடைய கண்கள் அனுதினமும் பல காரியங்களை காண்கின்றது. அந்த வேளைகளிலே அவனுடைய மனக்கண்கள் இருளடைந்திருக்கு மென்றால், அவன் காண்பதெல்லாவற்றையும் இச்சிக்கின்றவனாக இரு ப்பான். மனக் கண்கள் தெளிவாக இருக்கும் போது, அவனுடைய கண் களுக்கு முன்பாக அவன் தன் கர்த்தரையே வைத்திருப்பான். பிரிய மானவர்களே, தேவனுடைய கற்பகைள் தூய் மையாவைகளை நாம் சிந்திக்கும்படி நம்மை தூண்டுகின்றது. அந்த கற்பனைகளைப் பற்றிக் கொள்கின்றவர்களின் மனக்கண்கள் தெளிவாக பார்ப்பதால், இந்த உல கத்தினால் உண்டாகும் இச்சைகளுக்கு நாம் நீங்கலாக்கப்படுகின்றோம். நாம் இருளிலே நடங்கின்றவர்கள் அல்லர். நாம் பகலுக்குரியவர்கள். நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாக இருக்கின்றோம். எனவே இருளின் அதிகாரம் நம் மனக்கண்களை குருடுபடுத்த முடியாது. அனுதினமும் கர்த்தருடைய வேதத்தை தியானியுங்கள். பிரகாசமுள்ள மனக்கண்களை வாஞ்சியுங்கள்.

**சங்கீதம் 19:8**

**கர்த்தருடைய கற்பனை தூய் மையும், கண்களைத் தெளிவி க்கிறதுமாயிருக்கிறது.**

**ஜெபம்:** அன்பின் பரலோக தகப்பனே, இந்த உலகத்தினால் உண்டான வைகளை நான் இச்சிக்காமல், உம்முடைய சித்தத்தின்படி நான் வாழும் படிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்திச் செல்வீராக. இர ட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வுக்குச் செல்லும் பாதை

இனி தாங்கள் வசிக்கும் ஊரிலே அநேக நாட்கள் இருக்க முடியாது. எனவே வேறொரு ஊருக்கு சென்றுவிட வேண்டும் என்று ஊரார் நிச்சய த்தோடு, பகுதிபகுதியாகவும், பங்கு பங்காகவும், பயணத்தை ஆரம்பித் தார்கள். ஊரைவிட்டு வெளியே வந்ததும், வேறு பல மனிதர்களோ ஒரு குறிப்பிட்ட சௌகரியமான பாதை வழியாக பயணம் செய்து கொண் டிருந்தார்கள். அந்தப் பாதையானது சமதளமானதும், மிருதுவானதுமாக காட்சியளித்தது. எனவே, அந்த ஊரிலிருந்து புறப்பட்ட பலரும் அந்தப் பாதையைத் தெரிந்து கொண்டார்கள். அதைக் கண்ட அந்த ஊரின்வயது முதிர்ந்த மனி தனானவர்: மக்களே, இந்தப் பாதை பார்வைக்கு வசதி நிறை ந்ததாக காட்சியளிக்கின்றது. அநேகர் இந்த வழியிலே செல்வதால், இது சிறந்த வழி என்று எண்ணி விடாதிருங்கள். இதன் வழியில் வேதனைகளும், முடிவில் துன்பமும் உண்டாகும். எனவே இந்த வழியை விட்டுவிலகுங்கள் என்று அறிவுரை கூறினார். அதை கேட்ட சில மனிதர்கள் அவரை நோக்கி: ஐயா, நாங் கள் அறிந்த நாட்கள் முழுவதும் நீங்கள் இந்த ஊரிலேயே வாழ்ந்திரு க்கின்றீர்கள். உங்களுககு எப்படி இந்த பரந்த வழியின் முடிவைப் பற்றித் தெரியும் என்று கேட்டா ர்கள்.இந்த வழியூடாக ஆயிரமாயிரமாக, கல்விமான்கள், ஞானிகள், பிரபுக்கள் செல்கின்றார்கள். அவர்கள் எல் லோரும் மதியற்றவர்கள் என்று நீங்கள் கூறுகின்றீர்களா? என்றார்கள். அதற்கு அந்த வயதானவர்: பிள்ளைகளே, பல ஆண்டுகளுக்கு முன்ன தாக, நான் நீங்கள் கேட்ட கேள்வியையே கேட்டுக் கொண்டு, என் கண் களுக்கு அருமையாகத் தெரிந்த இந்த விசாலமான வழியிலே சென்று என் வாழ்நாட்களின் பெரும்பகுதியை விரயமாக்கிக் கொண்டேன். எப் படியோ சொற்பகாலம் உல்லாசமாக இருந்தது, அதன் முடிவிலே வேத னையும் துன்பமுமே. உண்டானது பலர் திரும்பி வரமுடியாதபடிக்கு தங் கள் வாழ்வைக்கூட கெடுத்துக் கொண்டதைக் கண்டேன். எனக்கோ இன் னுமொரு சந்தர்ப்பம் கொடுக்க ப்பட்டிருக்கின்றது, அதை நான் விரய மாகக்க மாட்டேன் என்று ஒரு குறுகிய பாதை வழியாக அவர் தன் பய ணத்தை தொடர்ந்தார். ஆம் பிரியமானவர்களே, பெரும்பான்மையா னோர் செல்லும் வழியேசிறந்ததென்று நாம் எண்ணிக் குழப்பமடையா மல், ஜீவனுக்கு செல்லும் வழியிலே செல்லுவோமாக. அதன் வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாக இருந்தாலும், முடிவிலே நித்திய பேரின்பம் உண்டு.

**மத்தேயு 7:14**

**ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்**

**ஜெபம்:** நித்திய வழியை எனக்கு காண்பித்த தேவனே, உலகத்தின் போக்கில் போகும் வழியிலே சென்று, என் அழைப்பை நான் கெடுத்துக் கொள்ளாமல், நீர் காண்பித்த இடுக்கமான வாசல் வழியே செல்ல கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# என்னுடைய அழைப்பு

ஒரு தகப்பனானவர் பாடசாலைக்கு செல்லும் தன் மகனானவனுக்கு பல கலைகளை கற்றுக் கொள்ளும்படிக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். அவன் கல்வியிலும், விளையாட்டு துறையிலும் சிறந்து விளங்கினான். அவன் வாலிப பருவத்தை அடைந்து, பட்டப்படிக்கு செல்ல வேண்டிய நாட்கள் அண்மித்த போது, பிரபல்யமான விளையாட்டுக் கழகமொன்றிலிருந்து அவனுக்கு அழைப்பு வந்தது. அநேக வருடங்கள் படித்து, இன்னும் பல வருடங்கள் கடுமையாக உழைத்து சேர்ப்பதைப் பார்க்கிலும், அந்த விளையாட்டு கழகத்தில் சேர்ந்து கொண்டால், நூறு மடங்கு அதிகமாக ஒரே வருடத்தில் உழைத்துவிடலாம் என்று அந்த அழைப்பைஏற்கும்படி தகப்பனானவர் அறிவுரை கூறினார். அதனால் அவன் தன் மேற்படிப்பை விட்டுவிட்டான். விளையாட்டுத் துறையில் பயிற்சிகளும், முக்கிய போட்களும் வார இறுதியில் நடைபெறுவதால், ஆலயத்திற்கு செல்வதை அவன் விட்டுவிட்டான். எப்போதவது நேரம் கிடைக்கும்போது, கிழமை நாட்களிலே ஆலயத்திற்கு செல்லலாம் என்று பெற்றோரும் அறிவுரை கூறினார்கள். இப்படியாக, அந்த விளையாட்டு கழகத்திலே இணைந்து கொள்வதற்காக தன் வாழ்க்கையிலே எதையும் இழந்துவிட அவனும் அவனுடைய குடும்பத்தாரும் தயாராக இருந்தார்கள். தங்கள் மனதில் தோன்றும் இச்சைகளை அவர்கள் அழைப்பு என்று கூறிக்கொண்டார்கள். இவ்வண்ணமாகவே, இன்று பல தேவ பிள்ளைகளும், தங்கள் அழைப்பின் மையப்பொருளாக பணத்தை வைத்திருக்கின்றார்கள். அதவாது, நான் இன்ன இடத்திலே இப்படியாக கல்வி கற்பதையே விரும்புகின்றேன். அந்த விருப்பத்தின் முக்கிய காரணியாக நல்ல உத்தியோகத்தை எடுப்பதும், கைநிறைய உழைப்பதுமாக இருக்கின்றது. அது தங்களுடைய அழைப்பு என்று கூறிக் கொண்டு, தேவன் விட்டுவிடாதே என்று சொல்லும் காரியங்களைவிட்டுவிட்டு, தேவன் விட்டுவிடு என்று கூறும் காரியங்களை பற்றிக்கொள்கின்றார்கள். தாங்கள் விரும்பும் கல்விக்காக, வேலைக்காக, திருமணத்திற்காக, தங்கள் உல்லாச பயணங்களுக்காக தேவன் நியமித்த ஒழுங்குகளை விட்டுவிட அவர்கள் ஆயத்தமுள்ளவர்ளாக மாறிவிடுகின்றார்கள். நீங்களோ இவ்வண்ணமாக கர்த்தரை அறிந்து கொள்ளவில்லை. எனவே, முதலாவதாக தேவனுடைய சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேற இடங்கொடுங்கள். தேவசித்தத்தின் மையப்பொருள் நித்திய ஜீவனாக இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளுகள்.

**1 யோவான் 2:17**

தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

**ஜெபம்**: நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, இவ்வுலகிலே வரும் அழைப்புக்கள் என் வழியேவரும் அழைப்புக்கள் யாவற்றையும் உம்முடைய அழைப்பு என்று எண்ணாமல், நீர் காட்டிய வழியிலே செல்ல கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரித்தெடுக்கப்பட்ட சந்ததி

நியாயாதிபதிகளின் நாட்களிலே, ஏலி என்னும் ஆசாரியன் கர்த்த ருடைய சமுகத்திலே ஊழியம் செய்து வந்தான். அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் ஆசாரிய ஊழியம் செய்ய நியமி க்கப்பட்டவர்களாக இருந்தும் கர்த்தரை அறியாதவர்களாக வளர்ந்து வந்தார்கள். தேவ ஆலயத்திலே வளர்க்கப்பட்டும் அவர்கள் துன்மார்க்க ராக இருந்தார்கள். அது எப்படி ஆயிற்று? தன் பிள்ளைகளின் மீறுத ல்களை ஆசாரியனாகிய ஏலி அறி யாதிருந்தானோ? இல்லை, அவன் நன்றாக அறிந்திருந்தான். அவன் தன் குமாரருக்கு அறிவுரை கூறி னானோ? ஆம், "என் குமாரரே, வேண்டாம் நான் கேள்விப்படுகிற இந்தச் செய்தி நல்லதல்ல. கர்த்தரு டைய ஜனங்கள் மீறி நடக்கிறத ற்குக் காரணமாயிருக்கிறீர்களே." என்று கூறினான். அவர்கள் தேவ னுடைய ஆலயத்தையும், பலிகளையும் தீட்டுபடுத்துவதைக்குறித்து மேற்கொண்டு ஏதவாது செய்தானோ? இல்லை, ஏலியானவன், தன் உள்ளத்திலே கர்த்தரைப் பார்க்கிலும் தன் குமாரரை மதித்து வந்தான். *(1 சாமு 2:29).* தேவன் பரிசுத்த சந்ததியை உருவாக்கும்படி சிலரை தமக்கென வேறு பிரித்திருக்கின்றார். ஆரம்ப காலங்களிலே அவர்களும் வாஞ்சையோடு தேவனுடைய கிரியைகளை நேர்த்தியாக நடத்தி வந்தார்கள். ஆனால், பிள்ளைகள் வளர்ந்து வரும் போது, நாம் அவர்களுக்கு எதையும் தடை பண்ணக் கூடாது, அவர்கள் அனுபவித்து திருந்த வேண்டும் என்று பிள்ளைகளுடைய போக்கிலே அவர்களை விட்டுவிடுகின்றார்கள். ஏலியானவனைப் போல, மேலோட்டமாக அறிவு ரைகளை கூறுகின்றார்கள் ஆனால் அவர்கள் உள்ளத்திலோ தங்கள் பிள்ளைகளின் வழிகளை ஆதரித்து, இளமைக் காலத்தில், பிள்ளைகள் அனுபவிக்க வேண்டியவைகளை அனுபவிக்கட்டும் என்று பாராமுக மாக விட்டுவிடுகின்றார்கள். நம்முடைய தேவனுக்கு மறைவான காரியம் உண்டோ? இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவன் மனிதர்களுடைய சிந்தையை அறியாரோ? என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப் படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அசட்டைத்தனத்தினாலே பிரித்தெடுக்கப்பட்ட தூய சந்ததி, தேவனை விட்டு பிரிந்து கீழ்படியா மையின் சந்ததியாக மாறிவிடுகின்றது. நாமோ, அவண்ணமாக பிரிந்து போகாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களாக இருப்போமாக.

**1 சாமுவேல் 2:30**

**என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப் படுவார்கள்**

**ஜெபம்:** பரிசுத்த சந்ததியை உருவாக்க என்னை வேறுபிரித்த தேவனே, நானும் என் வீட்டாரும் மனதார உம்மையே சேவிக்கும்படி உமது ஆலோசனையின் வழியிலே நடக்க எனக்கு உணர்வுள்ள இருயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரை கனப்படுத்துங்கள்

சில ஆண்டுகளுக்கு முன் திருமணமாகிய இளம் தம்பதிகள் தங்கள் குடும்பத்தை கட்ட ஆரம்பித்தார்கள். இவர்கள் தங்கள் சிறு பிரயாசத்தி லிருந்தே விசுவாசத்திலே உறுதியாய் வளரக்கப்பட்டு, ஆலயத்தில் உதவி ஊழியங்களிலே உற்சாகமாக கலந்து கொண்டு வந்தார்கள். புதிதாக குடியேறிய நாட்டிலே, கணவனானவன் நல்ல ஒரு உத்தியோ கத்தை செய்து வந்தான். தங்களுடைய வருவாயின்படி வீடொன்றை யும், புதிய வாகனமொன்றையும் வங்கி கடனுதவியோடு கொள்வனவு செய்தார் கள். சில மாதங்கள் சென்றபின்பு, கண வனாவனின் வேலை தலத்திலே, ஞாயி ற்று கிழமையன்று வேலைசெய்யும்படி நிர்பந்திக்கப்பட்டான். அவர்களுடைய புதிய வாழ்க்கைமுறைக்கு அந்த வேலை அவசியமாக இருந்தது. அத்தோடு, அப்படிப்பட்ட சம்பளத்தோடும் சலுகைகளோடும் இன்னு மொரு வேலையெடுப்பது கடினமானது என்று இருவரும் அறிந்திருந் தார்கள். அப்படியிருந்தும், அந்த கணவனானவன், தன்னுடைய இயக் குனரை அனுகி, ஞாயிற்றுக் கிழமைகளிலே தனக்கு வேலை செய்ய முடியாது என்று பணிவுடன் தெரியப்படுத்தினான். வார இறுதிநாட்க ளிலே வேலை செய்தால், இரட்டிப்பான சம்பளம் கிடைக்கும், இந்தக் கிழமை மட்டும் வேலை செய்ய என்று இயக்குணர் பதிலளித்தார். அத ற்கு அவன்: ஐயா, நான் செய்யும் வேலையை நான் கண்ணியமாகவும், நேர்மையாகவும் செய்து வருகின்றேன். இந்த கம்பனியைக் குறித்து எனக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு. ஆனால், நான் என்னுடைய தேவனை ஆராதிக்கின்ற நாளை வேறொன்றிற்கும் கொடுக்க தயாராக இல்லை. எல்லாவற்றிற்கும் ஒரு சிறிய ஆரம்பம் உண்டு. நான் ஒருநாள் கூட நான் அப்படி செய்ய மாட்டேன் என்று திட்டமாக கூறிவிட்டான். பிரியமானவர்களே, இந்நாட்கள் பிரதிஷ்டைகள், அர்பணிப்புக்கள் அற்பமான காரியங்களுக்காக உடைக்கப்படுகின்ற நாட்கள். தேவனைக் குறித்து நீங்கள் ஆரம்பித்தில் கொண்ட வைராக்கியத்தை விட்டு விடாதி ருங்கள். உங்களுக்கு வாழ்க்கையில் பொருளாதார நஷ்டம் வந்தாலும், மனிதர்களைக் குறித்தும் இந்த உலக தேவைகளைக் குறித்தும் பயப்ப டாதிருங்கள். ஆத்துமாவை பரலோகத்தில் சேர்க்க வல்லவருக்கே நீங் கள் எல்லா காரியங்களிலும் பயந்திருங்கள். பூமியும் அதன் நிறையும் அதன் குடிகளும் கர்த்தருடையது. கர்த்தருக்கு பயந்து, அவருடைய வழிகளிலே நடக்கின்றவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவு படுவதி ல்லை.

**சங்கீதம் 34:9**

**அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை**

**ஜெபம்**: என்னை உம்முடைய பிள்ளையாக்கி என் தேவனாகிய கர்த் தாவே, எக்காலத்திலும், எல்லா காரியங்களிலும் நான் உமக்கே முதலிட த்தை கொடுக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | ஆனி 12

📖 மாலை வாசகம் – மல்கியா 1:6

# ஆண்டவரின் ஆளுகை

ஒரு பிள்ளையானது பிறந்து சில நாட்களுக்குள்ளேயே, பெற்றோரான வர்கள் பதினெட்டு வருடங்களுக்கு பின் வரவிருக்கும் அந்தப் பிள்ளை யின் பட்டப்படிப்புக்கு வேண்டிய காப்புறுதியைக் குறித்து பெற்றோர், காப்புறுதி முகவரோடு பேசிக் கொண்டார்கள். திட்டமிட்டு வாழ்வதிலே தவறு இல்லை. ஆனால், மனிதர்கள் இன்று தேவனுடைய ஆளு கை யை கனப்படுத்தாமல், உலகத்தின் போக்கிலே வாழும்படிக்கு தங்க ளையும் தங்களின் எதிர்காலங்க ளையும் ஒப்புக்கொடுத்து, அந்த வழியிலே பிள்ளைகளையும் பயி ற்சிவிக்கின்றார்கள். மேற்படிப்பை தொடரவிருக்கும் மகனானவனோ, சுமார் நான்கு வருடங்களுக்குபின் எப்படிப்பட்ட வேலையை செய்ய லாம் என்று அதிகமாக தன் நண்பர்களோடு பேசிக் கொண்டிருந்தான். அதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டி ருந்த அவனுடைய தந்தையார். அவனை நோக்கி மகனே: நான் பிறந்து வளர்ந்த தேசத்திலே ஏற்பட்ட உள்நாட்டு குழப்பங்களால், இடம்விட்டு இடம் பெயர்ந்தோம். நினைத்த படி எம்மால் எமது கல்வியை பூர்த்தி செய்ய முடிய வில்லை. சொந்த தேசத்தைவிட்டு இடம்பெயர்ந்து இந்த தேசத்தில் புதிதாக குடியேறி னோம். இந்த புதிய தேசத்திலே நீ கூறும் எந்தப் பல் கலைக்கழகத்தி ற்கும் நாங்கள் சென்று படிக்கவில்லை. ஆனால், இன்று, இந்தத் தேச த்திலே சிறந்து பல்கலைக்கழகங்களிலே படித்து பட்டம் பெற்ற வர்க ளும், எனக்கு கீழே வேலை பார்க்கின்றார்கள். எனக்கிருக்கும் ஞான த்தை குறித்து இங்கிருப்பவர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். இவைகளெ ல்லாம் எப்படி ஆயிற்று? சர்வ வல்லமையுள்ள தேவனுடைய கரம் எங் களோடு இருந்தது. அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடு கிறார் எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிர புக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகி றார். நான் உட்காரும் ஆசனம் மேன்மையானது அல்ல. மாறாக வான த்தையும் பூமியையும் படைத்த தேவனாகிய கர்த்தர் என்னுடைய பரம தந்தையாக இருப்பதே என்னுடைய மேன்மை என்று தன் மகனான வனிற்கு தகப்பனாவர் அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, தேவ னாகிய கர்த்தர் உங்கள் ஆண்டவரானால், அவர் உங்கள் வாழ்க் கையை ஆளுகை செய்யட்டும். உங்கள் எண்ணங்கள், அபிலாஷைகள், திட்டங்கள் யாவும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்திற்குளாக இருக் கட்டும். அந்த சித்தத்திற்குள்ளேயே நீங்கள் சமானதா னமான வாழ்க்கையை எப்போதுமே கண்டடைய முடியும்.

**சங்கீதம் 113:7**

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்.

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, இந்த உலகத்தார் உலகத்தின் போக்கை கனம்பண்ணுகின்றார்கள், நானோ, எப்பொழுதும் உம்முடைய ஆளுகைக்குள் இருக்கும்படிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவ சித்தம் நிறைவேறும்

பண்டைய எகிப்து ராஜ்யமானது அன்றைய உலகில் நாகரீகமான கலச் சாரமுடையதாகவும், படைப்பலமுள்ள ராஜ்யமாகவும் இருந்தது. அவர்க ளுடைய ராஜாவாகிய பார்வோன் மகா பெரிய சக்கரவத்தியாக இருந்து வந்தான். அவர்கள் மத்தியிலே, எபிரெய பிள்ளையாண்டனாகிய யோ சேப்பு, அவன்வாழ்ந்ததேசத்திலிருந்து, அநியாயமாக அடிமையாக விற் கப்பட்டு, செய்யாத குற்றத்தி ற்காக எகிப்தின் அரச சிறையிலே வைக் கப்பட்டிருந்தான். எகிப்து ராஜ்யத் தை பொறுத்தவரையில் அவன் அடி மையாகவும்குற்றவாளியாகவும் கரு தப்பட்டிருந்தான். அவனுடைய சொ ந்த அண்ணன்மார் தொடக்கம் பலரும் அவனுக்கு அநேக அநியாயங் களைசெய்தார்கள். கர்த்தர் முன்குறித்த நாளிலே,யோசேப்பானவன் தீவி ரமாக சிறையிலிருந்து பார்வோனின் அரண்மனைக்கு பார்வோனினால் வரவழைக்கப்பட்டான். தேவனானவர்தாமே எகிப்து தேசத்தின் மேலும், அன்றைய உலகத்தின்மேலும் வரவிருக்கும் காரியங்களை யோசேப்பின் வழியாக பார்வோனிற்கும் அவனுடைய ஊழியக்காரருக்கும் வெளிப்ப டுத்தினார். அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொரு வன் உண்டோ என்றான். பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெ ல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப் போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொரு வனும் இல்லை என்று சொல்லி, நான் பார்வோன் ஆனாலும் எகிப்து தேசத்திலுள்ள வர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையை யாவது தன் காலையாவது அசைக்கக் கூடாது என்று, எகிப்து தேசம் முழுவதும் யோசேப்பை அதிகாரியாக்கினான். அவனுடைய ராஜ்யத் திலே, பல கலைகளை கற்றவர்களும், ஞானவான்களும் அவனைச் சூழ இருந் தார்கள். பார்வோனின் ஆட்சிக்குள்ளே, அரண்மனை ஆசனங்களில் அம ரும் பல அதிகாரிகள் இருந்தார்கள். ஆனால் எந்தக் கலையையும் கற்றறியாத யோசேப்பு எல்லா இக்கட்டுகளிவும் தன்னுடைய தேவனா கிய கர்த்தரைவிட்டு விலகவில்லை. கர்த்தரும் அவன் செல்லுமிடமெ ங்கும் அவனோடு இருந்தார். யோசேப்பானவன் எகிப்திலே பெரியவ னாகிய போது, தன் ஆசனத்தைக் குறித்து மேன்மைபாராட்டாமல், தேவனானவர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றும்படி என்னை அனுப் பினார் என்று தன்னை தேவன் முன்னிலையிலே தாழ்த்தினான். எனவே தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை அறிந்த நாம் தேவ சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**ஆதியாகமம் 45:7**

**தேவன் என்னை உங்களுக்குமுன்னமே அனுப்பினார்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, நீர் நிர்ணயித்த காரியத்தை ஒருவாராலும் தடுக்க முடியாதென்பதை உணர்ந்த்வர்னாக, உம்முடைய சித்தத்திற்கு நான் என்னை ஒப்புக் கொடுத்து வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குழப்பான நேரங்கள்....

நாட்டிலே நிலவும் சாதகமற்ற சூழ்நிலை காரணமாக ஒரு தகப்பனானவருடைய வியாபாரம் வெகுவாய் பாதிக்கப்பட்டது. கல்வி நிலையங்கள் அநேக நாட்கள் பூட்டப்பட்டிருந்தது. அதனால் தன்னுடைய பிள்ளைகளுடைய எதிர்காலம் எப்படியாக இருக்குமோ என்று அவர் மனம் குழம்பிய நிலையிலே தன் நண்பராகிய போதகரொருவரிடம் தன் மனதின் கவலைகளை குறித்து எடுத்துரைத்தார். அதற்கு அந்தப் போதகரானவர், நண்பா: தானியேலும் அவனோடுகூட சில வாலிபர்களும், அவர்களுடைய இளவயதிலே பாபிலோன் ராஜாவினால் சிறைப்பிடிக்கப்பட்டு, தங்கள் குடும்பத்தைவிட்டு, தேசத்தைவிட்டு பிரிக்கப்பட்டார்கள். பாபிலோன் தேசத்திலே அடிமைகளாக வைக்கப்பட்டு, ராஜாவிற்கு சேவை செய்யும்படி மூன்றரை வருஷம் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுகொள்ளும்படி பணிக்கப்பட்டார்கள். அவர்கள் மாத்திரமல்ல, அங்கே இன்னும் பல வாலிபர்களும் இருந்தார்கள். அவர்களுக்கும் அதே பிரகாரமாக கற்றுக் கொடுத்தார்கள். இவைகள் யாவற்றின் மத்தியிலும் தானியேலும் அவனுடைய நண்பர்கள் மூவரும் தங்களுடைய தேவனாகிய கர்த்தரை மறந்து போகவில்லை. தாங்கள் அந்நியர்களால் தீட்டுப்படாதபடிக்கு, தங்கள் வாழ்க்கையை கர்த்தர் முன்னிலையிலே தூய்மையாக காத்துக் கொள்வதேயே தங்கள் வாழ்க்கையின் முதன்மையாக நோக்கமாக கொண்டிருந்தார்கள். குறித்த நாட்கள் நிறைவேறிய போது, அவர்கள் ராஜாவின் முன்பாக கொண்டு போகப்பட்டார்கள். ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக் கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்துமடங்கு சமர்த்தராகக் கண்டான். ஏனெனில், அந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார் தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். அந்நிய தேசத்திலே, தேவனானவர் அவர்களை மேன்மைப்படுத்தினார். எனவே, நீ கலங்காமல், தேவனை பற்றியிரு. உன் பிள்ளைகளுகடகும் தேவனுடைய வழியிலே நடக்கும்படி கற்றுக் கொடு. அவர் முன்குறித்த நேரத்திலே யாவற்றையும் நேர்த்தியாகவும், செம்மையாகவும் செய்து முடிப்பார் என்று ஆலோசனை கூறினார்.

**தானியேல் 2:21**

**அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்; ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்;**

**ஜெபம்** வாக்குரைத்ததை செய்து முடிக்கின்ற தேவனே, நான் சாதகமற்ற சூழ்நிலைகளை கண்டு சோர்ந்து போகாமல், எப்போதும் உம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் உறுதியுள்ள உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாரோடு இசைந்திருக்கின்றோம்?

உயர்கல்விகற்கும் சில மாணவர்கள், வழமைபோல தெருவோரமாக ஒரு இடத்திலே நின்று, வெள்ளிக்கிழமை இரவு தாங்கள் செல்லவிருக்கும் கேளிக்கை காட்சியைப் (Entertainment show) பற்றி சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மத்தியிலே ஆலயத்திற்கு செல்லும் வாலிபனும் அவர்களோடு இசைந்திருந்தான். ஆனால் மற்றய வாலிபர் களோ அவனை யார் என்று அறியா திருந்தார்கள். எதிர்பாராத விதமாக அந்த ஊரில் வசிக்கும் பக்தியுள்ள வாலிபனொருவன் அவ்வழியாக வந் தான். அவனை தூரத்தில் கண்டதும், அந்த வாலிபர்கள், கடவுளை கண்ட புறம்போக்கன் வருகின்றான் என்று தங்களுக்குள்ளே அவனைக் குறித்து கேலி செய்து நகைத்தார்கள். அவர்கள் அருகிலே அந்த பக்தியுள்ள வாலிபனானவன் வந்த போது, அவர்கள் மத்தியிலே நின்று கொண்டிருக்கும் அந்த ஆலயத் திற்கு செல்லும் வாலிபனை அவன் கண்டு, அவனோடு கைகுலுக்கி, கர்த்த ருக்கு ஸ்தோத்திரம் (Praise the Lord) என்று வாழ்த்துதலை கூறினான். அதைக் கேட்ட மற்றய வாலிபர்கள் அவனை நோக்கி: உனக்கெப்படி இவனைத் தெரியும் என்று கேட்டார்கள். அதற்கு அந்த பக்கியுள்ளவன், இவன் என்னோடு ஆலய த்திற்கு வருபவன். நாம் இருவரும் வாலிப கூட்டத்தில் இருக்கின்றோம் என்று கூறி தன் வழியிலே சென்றுவிட்டான். அந்த மாணவர்கள் யாவரும் தங்களோடு சேர்ந்து தங்களைப் போல நடந்துகொள்ளும் ஆலயத்திற்கு செல்லும் சகமாணவனை பார்த்து: இதை ப்பற்றி எங்களுக்கு நீ ஒன்றும் கூறவில்லையே என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள். அதற்கு அவன்: ஓ! நான் சும்மா ஆலயத்திற்கு போய் வருகின்றேன் என்று சமாளிக்கத் தொடங்கினான். ஆம், பிரியமானவர் களே, உலகத்தார் முன்னிலையில் தேவ நாமமானது நம்மால் தூஷிக்கப்பட நாம் காரணராய் இராமலும், ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள் வோமாக. உங்கள் இச்சசைகளை உண்டு பண்ணுகின்ற உங்கள் தொடர்வுகளை துண்டித்து விடுங்கள். தேவனுடைய நாமம் உலகத் தார்களுக்குள்ளே உங்கள் மூல மாய்த் தூஷிக்கப்படுகிறதிற்கு இடங் கொடாதிருங்கள். இப்படிப்பட் ட கீழ்ப்படியாமைகளினாலே ஏன் உங்கள் மேல் தேவ கோபாக்கினை வருவித்துக் கொள்ள வேண்டும்? எனவே பெற்றுக் கொண்ட மகத்தான அழைப்பை காத்துக் கொள்ளுங்கள். உலகத்தார் முன்னிலையில் தேவனுக்கு சாட்சியாக வாழுங்கள்.

**எபேசியர் 5:14**

ஆதலால், தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு,

**ஜெபம்:** உன்னதமான தேவனே, நான் பெற்றுக் கொண்ட உன்னதமான அழைப்பை மோசம் போக்கும் உலக மாம்ச இச்சைகளுக்காக இழந்து போய்விடாதபடிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்து வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனிதர்கள் மத்தியிலே நீங்கள் யார்?

பெரிய கம்பனியொன்றிலே வேலைக்கு சேர்ந்த மனிதனானவன், கர்த்தருக்கு பயந்து அவர் வார்த்தையின் வழியிலே வாழ்கின்றவனாக இருந்தான். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், தன்னை யார் என்று மற்றவர்களுக்கு காண்பிப்பதற்கு எவ்வித தயக்கமும் இல்லாதவனாக, மாலையிலும், வார இறுதிநாட்களிலும் தேவ காரியங்களில் ஈடுபடுவதிலே தான் நேரத்தை முதலீடு செய்கின்றேன் என்று கூறிக் கொள்வான். அதனால், ஆரம்ப வருடங்களிலே, பலருடைய நட்பையும் நன்மதிபபையும்அவன் இழந்து போனான். இத்தனை வேலையாட்களுள்ள இந்தக் கம்பனியிலே, தேவ பயமுள்ளவன் நான் ஒருவன்தானா? வேறு யாரும் இல்லையா என்று தேடிக்கொள்வான். அவனுடைய ஆச்சரியத்திற்கு, அவன்வேலை செய்யும் பிரிவிலேயே ஆலயத்திற்கு செல்லும் ஒரு மனி தன் இருந்தான். ஆனால், அவன் தேவ பயமுள்ளவர்களைக் குறித்து பரி யாசம் செய்யும் மனிதர்களோடு ஐக்கியமாக இருந்து, அவர்கள் மத்தியிலே, தன்னை அவர்களைப் போலே காண்பித்துக் கொள்வான். தேவ பயமில்லாதவர்கள் அங்கே பெலமிக்கவர்களாகவும், செல்வாக்கு ள்ளவர்களாகவும் இருந்ததால், அவர்களை திருப்திபடுத்தும்படிக்கு, சில வருடங்கள் அந்த இடத்திலே வேலை செய்தும், தன்னை யார் என்று அவர்களுக்கு அடையாளம் காண்பிக்க அவன் விருப்பமில்லாதவனாக இருந்தான். ஏன் அவன் அப்படி நடந்து கொண்டான்? ஏன் அவன் பரி யாசக்காரரோடு ஐக்கியமாக இருந்தான்? முதலாவதாக, வேலை போய் விடுமோ என்று பயம், இரண்டாவதாக, ஆண்டவர் இயேசுவை தன் இர ட்சகர் என்ற அறிக்கையிட அவனுக்கு வெட்கம். தேவ அன்பானது இந்த உலகத்தை குறித்த பயத்தை புறம்பே தள்ளும். அப்படிப்பட்டவன், மனி தர்கள் மத்தியில் கர்த்தரைக் குறித்து சாட்சி சொல்வதை மேன்மையா னது என்று கருதுகின்றான். தேவ அன்பில் நிலைத்திருக்காதவனிட த்தில் தேவபயம் இல்லை எனவே இந்த உலகத்தை குறித்த பயம் அவன் இருதயத்திலே ஆட்கொண்டு விடுகின்றது. அவன் இந்த உலக போக்கிலே வாழ்ப வர்கள் மத்தியிலே தேவனைக் குறித்து சாட்சி பகர வெட்கமடைகின்றவனாக இருக்கின்றான். பிரியமானவர்களே, நம்மு டைய கர்த்தர், நாம் பாவிகளும் துரோகிகளுமாக இருந்த போது, நம் மைக் குறித்து வெட்கப்படாமல், நம்மீது அன்புகூர்ந்து தம் ஜீவனையே நமக்காக கொடுத்தார். எனவே நம்மை கர்த்தருடையவர்கள் என்று காண்பிப்பதற்கு நாம் ஒருபோதும் வெட்கமடையக்கூடாது.

**1 யோவான் 4:18**

அன்பிலே பயமில்லை; பூரணஅன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்

**ஜெபம்**: என்னை நேசிக்கும் பரம தந்தையே, நான் எப்போதும் உம் அன்பிலே நிலைத்திருக்கவும், என் உள்ளத்தில் உலகத்தைக் குறித்த பயம் என்னை ஆட்கொள்ளாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நன்நடக்கையை காண்பியுங்கள்

பல்கலைக்ழகத்திற்கு சென்ற மாணவியொருத்தி, மாணவர்கள், மாணவிகள், ஆசிரியர்கள் மத்தியிலே கர்த்தருக்கு பயந்து அவருடைய வழியிலே நடப்பவளாக இருந்து வந்தாள். அதனால், பலர் அவளோடு கனத்தோடு பழகிக் கொண்டாலும், தங்கள் இருதயத்திலோ அவளை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. ஏனெனில், மாலை வேளைகளிலே அவர்கள் செல்லும்இடங்களுக்குஇவள் செல்வதில்லை. அவர்களின் ஆகாத சம்பாஷணைகளிலே இவள் பங்கேற்பதில்லை. நடை, உடை, பாவனையிலே அவள் மற்றவர்களைவிட வித்தியா முள்ளவளாகவும் இருந்து வந்தாள். இதனால், தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றஇவள் தடையாக இருக்கின்றாள் என்று அநேகமான மாணவ மாணவிகள் இவளுடைய ஐக்கியத்தை தவிர்த்துக் கொண்டார்கள். அவள் மனதிலே வேதனையிருந்தாலும், அவள் தான் கொண்ட நம்பிக்கையிலே மிகவும் உறுதியாக இருந்தாள். இந்த சம்பவத்தை பல மாதங்களாக கவனித்து வந்த கர்த்தருக்கு பயந்து வாழும் மாணவனொருவன், அவளைத் தன் வாழ்க்கையின் துணையாக ஏற்றுக் கொள்ளும்படிவிரும்பினான். பிரியமானவர்களே இன்றைய உலகிலே, ஏன் தேவ பிள்ளைகள் தங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற நண்பர்களை கண்டு பிடிக்க முடியாமல் இருக்கின்றார்கள்? தேனீக்கள் பூக்களை நாடிச் செல்லும். ஆனால், அழுக்குகள் இருக்கும் இடத்தை கொசுகள் நாடிச் செல்லும். சில தேவ பிள்ளைகள் தாங்கள் செல்லும் இடமெங்கும், தங்கள் நடை உடை பாவனையிலே தங்களை உலகத்தார் போல காண்பித்துக் கொள்கின்றார்கள். அதனால், உலகத்தார்களே அவர்களை கவர்ந்து கொள்கின்றார்கள். கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் என்று வார்த்தையை கேட்டிருக்கின்றோம். ஆனால் இன்று தேவ ஆட்டுக்குடிகளை போலஇருக்க வேண்டிய சில தேவ பிள்ளைகள், ஓநாயின் தோலை அணிந்து கொண்டு, உலக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள விரும்புகின்றார்கள். இதனால் இவர்கள் சாத்தானின் கண்ணியிலே அகப்பட்டு, தங்கள் சுத்த மனசாட்சியிலே சூடுண்டவர்களாக, பரிசுத்த வாழ்க்கைவிட்டு அகன்று, உலக போக்கிலே செல்லும் வாழ்க்கைத்துணையை தெரிந்து கொள்கின்றார்கள். பிரிமானவர்களே, நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை ஒருபோதும் மறந்துவிடாமலும், உலகத்திற்கு ஒத்த வேஷம் தரிக்காமலும் உங்கள் வாழ்வை காத்துக் கொள்ளுங்கள்.

**2 கொரிந்தியர் 5:9**

அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்.

**ஜெபம்:** அன்பின் பரலோக தகப்பனே, நான் எங்கு சென்றாலும், என் நடை உடை பாவனை யாவும் உமக்கு உகந்ததாய் காணப்படுவதாக. உம்மைப் பிரியப்படுத்தும் இருதயத்தை எனக்கு தந்து உம் வழியில் நடத்திச் செல்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இடறல்கள் அகன்று போய்விடும்

ஒரு வாலிபனானவன் வேலை செய்யும் இடத்திலே, தன் வயதிற்கொத்த ஒரு பெண்ணை சந்ததித்தான். நன்நடக்கையுள்ள (Decent) அந்த பெண், இந்த வாலிபனோடு நட்புள்ளவளாக இருக்க விரும்பினாள். அதனால், வேலை முடிந்த பின்பு மாலையிலே சந்திக்க முடியுமா என்று கேட்டாள். அதற்கு அவன் இன்று மாலை ஆலயத்திலே வேதபாடம் இருக்கின்றது நான் அங்கே போக வேண்டும் என்று கூறினான். அப்படியானால் வருகின்ற வெள்ளி சந்திப்போம் என்றாள், அதற்கு அவன் பிரதி வெள்ளிதோறும் மாலையிலே ஜெபம் உண்டு என்று கூறினான். இப்படியாக அவள் கூறிய நாட்களிலே, உபவாசம், ஜெபம், ஆராதனை என்று அவன் கூறிய போது, உனக்கு வாழ்க்கையே இல்லையா என்று கேட் டாள். அதற்கு அவன், இதுதான் என் வாழ்க்கை, இதிலேதான் நான் களிகூருகின்றேன் என்றான். அதற்கு அவள் இதிலே களிகூருகின்றாயா? வருடத்தில் ஒரு முறைதான் நான் ஆலயத்திற்கு செல்வேன். அதுவே எனக்கு போதும் என்று கூறி, அவனோடு பேசுவதை அவள் விட்டுவிட்டாள்.

**ரோமர் 9:33**

**அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று**

பிரியமான சகோதர சகோதரிகளே, இன்றைய உலகிலே, ஆலயத்திற்கு செல்வதும், ஆண்டவர் இயேசுவின் நாமத்தை கூறுவதும் பலருக்கு இடறாலக இருக்கின்றது. ஏன், தங்களை கிறிஸ்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் சிலருக்கும் கூட அது ஆகாதகாரியமாக இருக்கின்றது. ஆண்டவர் இயே சுவின் நாமத்தை கூறும் போது, பிசாசுகள் ஓடிச் சென்று விடுவதுபோல, அவருடைய நாமத்தை அறிந்தும் அவரை அன்பு செய்யாதவர்களும், அவருடைய நாமத்தைபற்றி பேசும் போது, அந்த இடத் தைவிட்டு அகன்று போய்விடுகின்றார்கள். இன்று அநேகருக்கு உலக த்தின் நாகரீகத்தை தழுவிக் கொண்டு, தங்கள் கண்போன போக்கிலே வாழும் உல்லாசமான வாழ்க்கையை வாழ்வதற்கு இயேசுவின் நாமம் தடையாக காணப்படுகின்றது. ஆண்டவர் இயேசுவை விசுவாசித்து அவர் வார்த்தையின்படி தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்பவர்களுக்கோ, அவர் உறுதியான கன்மலையாக இருக்கின்றார். அந்தக் கன்மலையை தள்ளிவிடுகின்றவர்களுக்கு அவர் இடறிவிழும் கற்பாறையாக இருக்கின்றார். எனவே, உங்கள் வாழ்க்கையின் அடித்தளமாக ஆண்டவர் இயேசுவை வைத்திருங்கள். பல இடறல்கள் உங்களைவிட்டு தானாகவே அகன்று போய்விடும்.

**ஜெபம்:** அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் எனக்கு தந்தவரே, மறுபடியும் நான் அடிமைத்தனத்தின் கட்டுகளுக்கு உட்படாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள்

**எபேசியர் 4:1**

**நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,**

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாச குடும்பத்தை சேர்ந்த மகனான வனிற்கு, அவனுடைய பெற்றோர் திருமணத்திற்காக பொருத்தமான பெண்ணை தேடினார்கள். சில மாதங்களுக்கு பின், ஒரு நல்ல குடும்பத்தை சேர்ந்த, கல்விகற்ற, அழகான ஒரு பெண்ணின் விபரங்களை பெற்றுக் கொண்டார்கள். திருமண பேச்சுக்கள் ஆரம்பித்து, எல்லாப் பேச்சுக்களும் முடிந்த பின்பு, திருமணத்தை கிறிஸ்தவமுறையிலே வைப்பதா அல்லது பெண்ணின் குடுத்பத்தாரின் விருப்பப்படி வேறு முறையிலே வைப்பதா என்ற பேச்சு ஆரம்பித்தது. அந்த சம்பந்தத்தை பற்றி விசுவாச குடும்பத்தார் சபையின் மேய்ப்பரானவருக்கு கூறினார்கள். அதை கேட்ட மேய்ப்பனானவர் ஆச்சரியத்தோடு பெற்றோரை நோக்கி: இந்த விவகாரங்களைப் பற்றி நீங்கள் முன்னதாகவே அறிந்திருக்கவில்லையா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: அந்தப் பெண் எல்லா விதத்திலும் எங்கள் மகனானவனுக்கு மிகவும் பொருத்தமானவள், ஆனால், அவனோ விசுவாசக் குடும்பத்தை சேர்ந்தவளல்ல, அது ஒன்றுதான் குறை. ஆனால், எங்களுடைய மகனானவன் ஆலயத்திற்கு செல்வதைக் குறித்து அவர் ககளுக் எந்த முரண்பாடுகளும் இல்லை என்று கூறினார்கள். அதைக் கேட்ட மேய்ப்பரானவர், தேவன் கொடுத்த விலைமதிக்க முடியாத இரட்சிப்பை விளையாட்டாக எண்ணுகின்றார்களே என்று மனவேதனையடைந்தார். ஆம், பிரியமானவர்களே, இன்று சிலர் தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியை தேடுவதையும் தங்கள் பட்டியலில் கடைசி அம்சமாக வைத்திருக்கின்றார்கள். அந்த கடைசி அம்சத்திலும், தாங்கள் நினைத்தபடி மேய்ப்பரானவர் இணங்காதவிடத்து, தங்களுக்கு ஏற்றபடி வேறு இடங்களை பார்த்துக் கொள்கின்றார்கள். எல்லாக் காரியங்களை யும் தங்களுடைய இஷ்டப்படி மிக உறுதியுடன் தெரிந்து கொண்டு, பின்னர் தங்கள் வாழ்வை தேவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள். அதாவது, தேவனுடைய வார்த்தையை விட தங்கள் வழிகளை மேன்மைபடுத்த எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். தங்கள் எண்ணங்களை நிறைவேற்றப் பழகிக் கொண்ட தால், வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கையை குறித்து உணர்வற்று போய்வி டுகின்றார்கள். நீங்களோ, அவ்வண்ணமாக தேவனை அறியவில்லை. தேவனுக்கு எப்போதும் முதலிடத்தை கொடுங்கள். அவர் உங்களை நித் திய பேரின்பத்திற்கு நடத்திச் செல்வார்.

**ஜெபம்**: ஒரு பரிசுத்த சந்ததியை உருவாக்கும்படி என்னை வேறுபிரித்த தேவனே, நீர் தந்த இரட்சிப்பின் மகத்துவத்தை உணர்ந்து வாழும்டிக்கு, உணர்வுள்ள இருதயத்தை தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வெற்றியின் இரகசியங்கள்

ஒரு கிராமமொன்றிலே வாழ்ந்து வந்த மனிதனொருவனுக்கு பெரிய பண்ணை யொன்று இருந்தது. அவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். மூத்தவனும், இளையவனும் அவ்வப்போது தங்கள் தகப்பனான வனுக்கு உதவி வந்தபோதும், அவர்களுடைய இருதயமானது தகப்பனானவருடைய பண்ணை விவகாரங்களோடு இருக்கவில்லை. எப்படியாவது, இந்த ஊரைவிட்டு பட்டணத்திற்கு போய் அங்கே நாகரீகமாக வாழ வேண்டும் என்ற எண்ணமே அவர்களிடம் இருந்தது. இரண்டாவது குமாரனோ, தன் தகப்பனானவருடைய பண்ணை விவகாரங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்ததுடன், தகப்பனானவருடைய பண்ணை பரிபாலனத்தின் வெற்றியின் இரகசியத்தை தான் அறிந்து கொள்ள வேண்டும் என்று, தன் தகப்பனானவரோடு அதிக நேரம் ஆர்வத்தோடு செலவிட்டு வந்தான். தகப்பனானவரும், அவனுக்கு வெற்றியின் இரகசியத்தை, அனுபவரீதியாக, படிப்படியாக கற்றுக் கொடுத்தார். நீ இவைகளை அறிந்து கொண்டால், பண்ணையை மட்டுமல்ல, எந்த வியாபாரத்தையும் நேர்த்தியாக செய்ய முடியும் என்று அவனுக்கு அவர் அறிவுரை கூறினார். தகப்பனானவர், மற்றய இரண்டு குமாரர்களையும் நேசித்தார். அவர்களுக்கும் சொத்தின் பாகத்தை பகிர்ந்து கொடுத்தார். ஆனால், அவர்களோ தகப்பனானவரோடு நேரம் செலவிடுவதைப் பார்க்கிலும், அவரிடமிருந்து தங்களுக்கு வரவேண்டிய ஆசீர்வாதத்தின் பங்கை எதிர்பார்த்திருந்தார்கள். அவனவன் எதை எதிர்பார்த்து வாஞ்சையோடு காத்திருந்தானோ, அதை அவனவன் பெற்றுக் கொண்டான். பிரியமானவர்களே, இன்று அந்த இரண்டாவது குமாரனைப் போல, பரம தந்தையாகிய தேவனாகிய கர்த்தரை தங்கள் வாழ்விலே மேன்மைப்படுத்துகின்றவர்கள் மிகவும் சொற்பமானவர்களாகவே இருக்கின்றார்கள். தேவனை தேடுவதும், தேவ ஊழியங்களிகளிலே நேரங்களை செலவிடுவதும், அநாகரீகமான காரியங்களாக இன்று தோன்றுகின்றது. எனவே, பலர் நாகரீகமான, நவீன உபதேசங்களை பின்பற்றி, உலகத்தின் கொள்கை கோட்பாடுகளிலும், தங்கள் பிரயாசங்களிலேயும் அதிக நம்பிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆனால், சர்வத்தையும் படைத்த சர்வவல்லவருடைய அறிவை தள்ளிவிடுகின்றார்கள். அதனால், தங்களுக்கு தாங்களே கண்ணிகளை உருவாக்கிக் கொள்கின்றார்கள். நீங்களோ, நலமானதை பற்றிக் கொள்ளுங்கள். தேவனுடைய ஆலோசனையின்படி வாழ்ந்து நித்திய ஆசீர்வாதத்தை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 119:72**

அநேகமாயிரம் பொன் வெள்ளியைப்பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம்

**ஜெபம்**: நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என்று வாக்குரைத்த தேவனே, என்னுடைய மாம்சத்தின் எண்ணங்கள் என்னை மேற்கொள்ளாதபடிக்கு காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எனக்கு இனி மன்னிப்பு இல்லையா?

என்னுடைய மகளானவள், தன் இளவயதின் அறியாமையினாலே அந்
நிய நுகத்திலே பிணைக்கப்பட்டுவிட்டாள். நாங்களும் ஏதோ அந்த நாட்
களிலே அவளுடைய ஆசைக்கு இணங்கி திருமணத்தை செய்து வைத்
துவிட்டோம். தவ றுகள் நடந்து முடிந்து விட்டது. விபச்சாரத்தில் கையும்
களவுமாக பிடிக்கப்பட்ட ஸ்திரியையே, ஆண்டவராகிய இயேசு மன்
னித்துவிட்டார். எங்களுக்கும் எங்களு
டைய மகளுக்கும் மன்னிப்பு இல்
லையா என்று ஒரு பெற்றோர், மேய்ப
னானவரிடம் கேட்டார்கள். அதற்கு மேய்
ப்பரானவர்: பிரியமான சகோதரனே,
சகோதரியே, உங்களுடைய மகளான
வள், இளவயதின் அறியாமையினா
லே தன் இஷ்டப்படி செய்துவிட்டாள்.
ஆனால், தேவனுடைய வார்த்தையை
நன்கு அறிந்த நீங்கள், அதை நியாய
ப்படுத்தும்படி வெகுவாய் முயற்சி
செய்து, சபையில் பெலவீனர்கள் மத்
தியிலே அநேக இடற ல்களுக்கு கார
ணமாகயிருந்தீர்கள். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் இரக்கங்க
ளுக்கு முடிவில்லை. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இர
த்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். என்று பரிசுத்த
வேதாகமம் கூறுகின்றது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து,
விபசாரத்திலே பிடிபட்ட ஸ்திரியை மன்னித்தார். அவளை மன்னித்து
அனுப்பும் போது, “நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே” என் றார். பாவ
மன்னிப்புக்கு உண்மையான மனந்திரும்புதல் அடிப்படை யானது. திரும
ணமாகுவதற்கு முன்னர் உங்கள் மனதை கடினப்படுத்தி, தேவனுடைய
வார்த்தையை மீறி பல குழப்பங்களை ஏற்படுத்தினீர்கள். ஒருவரும் கெட்
டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்
மேல் தேவன் நீடியபொறுமையுள்ளவராயிருக்கிறார் (2 பேதுரு 3:9).
ஆனால், இப்போது நீங்கள் அன்று செய்த குற்றங்களுக்காக மனம்வ
ருந்துகின்றீர்கள். அது நல்லது. ஆனால், இன்றும், இனியும் நீங்கள் செய்ய
வேண்டிய காரியங்களை தேவனுடைய வார்த்தையின்படி செய்வதற்கு
மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள் என்று ஆலோசனை கூறி
னார். பிரிமானவர்களே, கர்த்தர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்த
மும், மிகுந்த கிருபையுமுள்ளவர். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்
குகிறதுபோல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். எனவே
தேவனுக்கு பயந்து அவருடைய வழிகளிலே நடக்கும்படி விழிப்புள்ள
வர்களாக இருங்கள்.

**1 யோவான் 1:9**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்**

**ஜெபம்**: இரக்கமுள்ள தேவனே, இன்று நான் உம்முடைய சத்தத்தை கேட்டு, என் இருதயத்தை கடினப்படுத்தாமல், உம்முடைய சித்தத்தை நான் நிறைவேற்ற உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீ ராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஏன் என்னை கடிந்து கொள்கின்றீர்கள்?

என்ன போதகர் ஐயா அவர்களே, இயேசுவைப் போல மாறவேண்டும் என்று ஓயாமல் பிரசங்கிக்கின்றீர்கள் ஆனால் நீங்களோ இயேசுவைப் போல என் குடும்பத்தின்மேல் அன்பை காட்டாமல், என் குற்றத்தை கடிந்து கொள்கின்றீர்களே என்று ஒரு விசுவாசியானவன் தன் போதக ரிடம் கூறினான். அவன் திறந்த மனதோடு, தன்னிடம் பேசியதை கேட்ட போதகரானவர், புன்முறுவலோடு அவனை அழைத்து. தம்பி, இப்படி இங்கே உட்காரு என்று கூறி, அவ னை நோக்கி: உன்னுடைய அப்பா வை நீ கடந்த மாதம் வைத்தியரிடம் மருத்துவ சோதனைக்காக கொண்டு சென்றாய் அல்லவா? வைத்தியர் உன்னிடம் என்ன சொன்னார் என்று கேட்டார். அதற்கு விசுவாசியானவன்: உடனடியாக சில சிகிச்சைகளை செய்யாதவிடத்து, அப்பாவிற்கு சீக்கரமாய் மரடைப்பு ஏற்படும் என்று கூறினார் என்றான். அது மட்டுமா கூறினார் என்று போதகர் கேட்டதற்கு: இல்லை, அப்பா, வைத்தியர் கூறியபடி உண்பதை கட்டுப்படுத்தாமலும், உடற்பயிற்சி செய்யாமலும், மாத்திரைகளை நேரத்திற்கு எடுக்காகததற் காவும் அவரை மிகவும் கடிந்து கொண்டார் என்று கூறினான். அதற்கு போதகரானவர்: மிகவும் கடிந்து கொண்டாரா? அப்படியானால், அந்த வைத்தியருக்கு உன் அப்பாவைக் குறித்து கரிசணை இல்லையா என்று கேட்டார். அப்பபோது அந்த விசுவாசியானவன் சிந்திக்க ஆரம்பித்தான். போதகரானவர் அவனை நோக்கி: தம்பி, தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும்படி நான் அழைக்கப்பட்டேன். உன்னை கடிந்து கொள் வதால் எனக்கு ஆதாயம் என்ன? நீ நீதியின் பாதையில் நடந்தால் யாரும் உன்னை கண்டிக்கப்போதில்லை. சரீர நோய்கள் மனிதனுடைய ஆயுள் நாட்களை இந்த உலகத்திலே குறைக்கும். ஆனால், ஆவிக்கு ரிய நோயானது மனிதனை நித்திய மரணத்திற்குள் தள்ளி விடும். சரீர ஆரோக்கியத்திற்காக மனிதர்கள் எவ்வளவாய் பிரயாசம்படுகின்றார்கள். அப்படியானால் உன்னுடைய ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்காக நீ எவ் வளவாய் பிரயாசப்பட வேண்டும். எனவே, ஆவிக்குரிய நோய்க ளின் அறிகுறிகளை நான் விசுவாசிகளின் வாழ்க்கையிலே காணும்போது, அவர்களை தேவனுடைய வார்த்தைகளால் அவர்களுக்கு கண்டித்து உண ர்த்திக் கூறுவது என்னுடைய பொறுப்பும் கடமையும் என்று கூறினார்.

**வெளி 3:19**

நான் நேசிக்கிறவர்களெவ ர்களோ அவர்களைக் கடிந் துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதை யாயிருந்து, மனந்திரும்பு.

**ஜெபம்**: சகல சத்தியத்தின் வழியிலே நடத்தும் தேவனே, உம்முடைய வார்த்தை பேசப்படும் போது, நான் என்னுடைய மீறுதல்களை மறைக் காமல், அறிக்கையிட்டு விடுவிடும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இருதயத்தில் மறைந்திருப்பவைகள்

நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்று கர்த்தராகிய இயேசு சமாரிய ஸ்திரியானவளுக்கு கூறினார். அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள். இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக்கொண்டுவா என்றார். அதற்கு அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள். இயேசு அவளை நோக்கி: எனக்குப்புருஷன் இல்லை யென்று நீ சொன்னது சரிதான். எப்படியெனில், ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்கிருக்கிறவன் உனக்குப் புருஷனல்ல, இதை உள்ளபடி சொன்னாய் என்றார். அப்பொழுது அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று காண்கிறேன். அன்பு ஆண்டவர் இயேசு, ஏன் அவளுடைய வாழ்க்கையின் அலங்கோலத்தை அவளுக்கு வெளிப்படுத்த வேண்டும்? அவளை அப்படியே மன்னித்துவிட்டால் என்ன? எனக்கு புருஷன் இல்லை என்று தன்னுடைய இருளான வாழ்க்கையை மறைத்து வைத்திருந்தாள். அவளிடம் மனந்திரும்புதல் இல்லை. உண் மையை பேசும் தன்மை இல்லை. ஆனால், அவள் தொடர்ந்தும், தேவனை தொழுது கொள்வதைக் குறித்து கர்த்தரிடம் கூறினாள். அவளைப் போல இன்றும் பல மனிதர்கள், வேத வார்த்தைகளை அறிந்திருக்கின்றார்கள். தங்கள் பாவங்களை மனிதர்களுக்கு மறைத்து வைத்துக் கொண்டு, சத்தியமான வார்த்தைகளின்படி வாழாமல், சத்திய வார்த்தைகளை பேசி, தேவனை ஆராதிக்கின்றார்கள். கர்த்தர் அந்த ஸ்திரியை நோக்கி: தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களா யிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார் என்று கூறினார். பிரியமானவர்களே, இருதயங்களை ஆராய்ந்தறிகின்றவர் நம்முடைய சிந்தையை அறிந்திருக்கின்றார். எனவே, மறைவானதும் துணிகரமானதுமான பாவங்களில் வாழாமல் அவைகளை அறிக்கையிட்டு, விட்டுவிட்டு, உண்மையோடு தேவனைத் தொழுது கொள்வோமாக.

**யோவான் 4:24**

**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்**

**ஜெபம்:** என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும், அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டாதபடிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தைத் தந்தருள்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தவறிலிருந்து தப்பித்துக் கொள்ள வழி

ஒரு வாலிபனானவன் தன் பட்டபடிப்பை முடித்தபின்பு, தன் நண்பர்கள் ஒருசிலரோடு சேர்ந்து வியாபார ஸ்தாபனமொன்றை சட்டப்படி நிறுவி னான். அவனுடைய தகப்பனானவர், நீ யாரை நண்பர்கள் என்று அழை க்கின்றாய் என்பதைக் குறித்து விழிப்புள்ளவனாக இரு என்று அநேக தடவைகள் அவனுக்கு அறிவுரைகளை கூறியிருந்தார். ஆரம்பத்திலே நன்றாக ஓடிக்கொண்டிருந்த வியா பாரமானது, தீடிரென்று ஸ்தம்பிதமா கிவிட்டது. அவனோடு கூட பங்குதா ரராக இருந்த சில நண்பர்கள், அவ ர்களுடைய ஸ்தாபனத்தின் சொத்து க்களை துஷ்பிரயோகம் செய்தா ர்கள். அதனால், நண்பர்களிடையே கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுவி ட்டது. தற்போது வியாபாரம் நட்டத்தில் ஒட ஆரம்பித்த போது,இந்த வாலி பனான், தன் நண்பர்களோடு உறவைத் துண்டித்துவிட்டு, தன் தொலை பேசி இலகத்தை மாற்றிவிட்டு, தொலைந்தது தொல்லை என்று கூறி, தன் வீட்டிலே இருந்துவிட்டான். ஆனால் சில கிழமைகளுக்கு பின்னர், முன்குறித்த ஒருநாளிலே நீதிமன்றத்திற்கு வரும்படியாக, சட்டபூர்வமான அறி விப்பை கடிதம் வாயிலாக பெற்றிருந்தான். அவனுடைய தகப்பனா னவர், அவனை நோக்கி: மகனே, வியாபாரத்தை ஆரம்பிக்க முன்னர் நீ என் ஆலோசனையை தட்டிக் கழித்துவிட்டாய். அதுபோல இக்கட்டிலி ருக்கும் நீ இப்பொழுதும் என் ஆலோசனையை தட்டிக் கழிக்காமல், அதற்கு செவிகொடு. இப்போதாவது உன் நண்பர், உண்மையான நண் பர்கள் இல்லை என்பதை நீ அறிந்து கொண்டது நல்லது. ஆனால், நீ சட்டபூர்வமான வியாபார ஒப்பந்தத்தில் உன்னை பிணைத்துவிட்டாய். நீ சட்டப்படி உன் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். நஷ்டம் உண்டு, ஆனால் உன் ஆணையை நீ இப்போது மாற்ற முடியாது. மேலும் உன் வாழ்க்கையை நீ குழப்பிக் கொள்ளாமல், பொறுமையோடு, நீ செய்ய வேண்டியவைகளை நீதியான வழியிலே செய்து முடி. உன் கடந்த கால பின்னடைவுகளானது உன் எதிர்காலத்திற்கு ஒரு நல்ல படிப்பி னை யாக இருக்கும் என்று அறிவுரை கூறினார். ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணி, சுய இஷ்டப்படி ஒரு தவறை செய்த பின்பு, அதை உணர்ந்து கொள்ளும் போது, அதிலி ருந்து தப்பித்துக் கொள்ள மறுபடியும் சுய இஷ்டப்படி பாவத்தை மறை க்க இன்னுமொரு பாவத்தை செய்து கொள்ளாமல், தேவனுடைய வார்த்தையின் வழியிலே வாழும்படி முற்றாக உங்களை தேவனுடைய பாதத்திலே ஒப்புக் கொடுங்கள்.

**அப்போஸ்தலர் 3:20**

உங்கள் பாவங்கள் நிவிர் த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள்மனந்திரும்பிக் குண ப்படுங்கள்

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, என் தவறான வழிகளிலிருந்து நான் தப்பித்துக் கொள்ள மேலும் தவறான வழியை தெரிந்து கொள்ளாமல், உம்முடைய சத்திய வழியில் என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இன்னுமொரு சந்தர்ப்பம் உண்டா?

அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? என்ற வார்த்தைகளை சிறுவயதுமுதல் அறிந்திருந்தும் நான் என் வாழ்க்கைத் துணையை என் இஷ்டப்படி தெரிந்து கொண்டேன். இன்று வீட்டிலே குடும்பமாக கர்த்தரை நோக்கி ஜெபிக்க முடியாது. வீட்டில்நடக்கும்விருந்துகளள் சினிமா கொட்டகைபோல இருக்கின்றது. பிள்ளைகள் அங்குமில்லை இங்குமில்லை என்று தேவனைக் குறித்த பயமின்றி வளர்ந்து வருகின்றார்கள் என்று தன் மனதின் ஆதங்கத்தை தன் பாட்டனாரிடம் பேரனானவன் கூறிக் கொண்டிருந்தான். அதற்கு பாட்டனானவர்: தம்பி, தேவனுடைய பிரமாணங்களை மீறி, நீ இப்படியாக திருமண ஒப்பந்தத்திற்குள் உன்னை பிணைத்துவிட்டாய். எனவே, ஒரு புருஷனா னவன் செய்யவேண்டிய கடமைகளை நீ உன் மனைவிக்கு செய்ய வேண்டும். இந்த நிலையிலே எல்லா குற்றத்தையும் அவளுடைய தலை யிலே போட்டுவிடாமல், உன் தவறை நீ நன்றாக உணர்ந்து, மனதார உன்னை தேவனிடம் அர்ப்பணித்து, உன் குடும்பத்திலே உன் அன்புள்ள நன்நடக்கையை காண்பித்துக் கொள். கர்த்தருக்கு முன்பாக நீ உண்மையுள்ளவனாக நடந்து கொண்டு நீடிய பொறுமையுள்ளவனாக இரு. மனதுருக்கமுள்ள நம்முடைய தேவனாகிய கர்த்தர் உன் கீழ்படிவுள்ள இருதயத்தைக் கண்டு உன் குடும்பத்தில் இரட்சிப்பை உண்டு பண்ணுவார் என்று அறிவுரை கூறினார். ஆம், பிரியமானவர்களே, முதலாவதாக, நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடந்தால், தவறிப் போய் மனந்திரும்ப வேண்டிய அவசியமில்லை (சங்கீதம் 128). ஆனால், கர்த்தரை அறிந்தபின்பும் இச்சைகளினாலே இழும்புண்டு, கண்போன போக்கிலே போய், தேவ சமாதானத்தை இழந்து போனால், அப்படியே உங்கள் வாழ்க்கையை தொடர்ந்தும் அழித்துக் கொள்ளாதபடிக்கு, காலதாமதமின்றி, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்துக்கே திரும்பி, உன் உங்களது முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுத்தால், அவர் வார்த்தையை அனுப்பி கல்லான இருதயங்களை, தமக்கேற்ற இருதயங்களாக மாற்றுவார்.

**எரேமியா 23:29**

என் வார்த்தை அக்கினியை ப்போலும்,கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறதல்லவோ?என்று கர்த்தர் சொல்லுகிறார்

**ஜெபம்**: மனதுருக்கமுள்ள என் தேவனாகிய கர்த்தாவே, என் துணிகரமான குற்றங்களை எனக்கு நீர் மன்னித்து உம்முடைய கிருபையின்படி மனமிரங்கி இரட்சிப்பின் சந்தோஷத்தை திரும்பத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சீர்பொருந்தப்பண்ணுதல்

ஒரு தகப்பனானவர், தன்னுடைய பிள்ளையானவனுடைய வாழ்க்கையிலே அவன் சில தவறான வார்த்தைகளை பேசுவதைக் கேட்டு, ஒரு சில தடவை கள் அவனுக்கு அவர் தயவாக ஆலோசனை கூறினார். சில நாட்களளுக்கு பின்பு, அவன் தன் நண்பர்களோடு விளையாடும் போது, மறுபடியும் தகாத வார்த்தைகளை பிரயோகிப்பதைக் கேட்டார். இதைக்கண்டு விசனமடைந்த தகப்பனானவர், இது தன் பிள்ளையானவனின் பழக்கமாக மாறுவதற்கு முன், அவனை நெறிப்படுத்த வேண்டும் என்று அவனை கண்டித்து, தண்டித்தார். பிள்ளையானவனுக்கு அது ஒரு கசப்பான அனுபவமாக இருந்துது. சில நாட்களுகளாக அவன் தன் தகப்பனானவரோடு பேசுவதற்கு தயக்கம் காட்டினான். தகப்பனானவர் தன் பிள்ளையை கண்டித்து, சில தண்டனைகளைகொடுத்தது அவருக்கு இனிப்பான அனுபவமாக இருக்கவில்லை. ஆனால், தன் பிள்ளையானவன், சரியான வழி யிலே நடக்க வேண்டும் என்பதற்காக அவனை நெறிப்படுத்தினார். அவர் உள்ளத்திலே தன் பிள்ளையானவனைக் குறித்து எந்தக் கசப்பும் இல்லை. அவன் வருத்தமாக இருந்த நாட்களிலே அவனை தன் தோளின்மீது தூக்கி சுமந்தார். இனியும் அப்படியே செய்வார். நம்முடைய வாழ்க்கையிலும், கண்டிப்பதும், தண்டிப்பதும், நெறிப்படுத்துவதும் ஒரு கசப்பான அனுபவமாக இருக்கின்றது. ஆவிக்குரியவர்களாகிய நாம் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் திருவசனத்தினால் சீர்பொருந்தப்பண்ண வேண்டும். எனினும் சில வேளைகளிலே, நாம் உடன் சகோதரர்களையும் கண்டித்து உணர்த்த வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்படுகின்றோம். கண்டிக்கப்பட்டவர் அந்தப் பிள்ளையானவனைப் போல, பேசுவதற்கு தயக்கம் காட்டினாலும், நாம் கண்டித்து உணர்த்திய பின்பு, அவர்களைக் குறித்த கசப்பை நம் மனதிலே வைத்திக்கக்கூடாது. நாம் மாறாக, அவர்களுக்காக பரிந்துபேசி ஜெபிக்க வேண்டும். ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கம் நம்மில் பெருக வேண்டும். அந்த தகப்பனானவரைப் போல, தூக்கிச் சுமக்கின்றது போன்ற இருதயம் நம்மில் உருவாக வேண்டும். பகைவரை நாம் நேசிக்க வேண்டும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. அப்படியானால், நம் உடன் பங்காளிகளை நாம் எவ்வளவு அதிகமாக நேசிக்க வேண்டும். எனவே, அவர்களை நினைக்கும்போதெல்லாம் அவர்களுக்காக வேண்டுதல் செய்ய பழகிக் கொள்ளுங்கள்.

**2 தீமோத்தேயு 4:2**

**எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு.**

**ஜெபம்:** இரக்கத்தில் ஐசுவரியமுள்ள தேவனே, நித்திய ஜீவனுக்கென்று நீர் அழைத்தவர்கள், அதை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற மனநிலையையோடு அவர்களுக்காக வேண்டுதல் செய்யும் மனதை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆராய்ந்து பாருங்கள்

தேவனிடம் இருந்து பத்து கட்டளைகளை பெற்றவர்கள், அவைகளை தங்கள் வாழ்வில் மனதாரக் கைக்கொள்வதைவிட, மற்றவர்களுடைய வாழ்க்கையிலே அவைகளை திணிப்பதிலும், அவற்றிலிருந்து தவறுகின்றவர்களை தண்டிப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வந்தார்கள். அப்படிப்படிட்ட மனநிலையுள்ள சிறப்பு குடிமக்களை கண்ட கர்த்தர், அவர்களை நோக்கி: சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள் தாங்களோ ஒருவிரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள் என்று கூறியிருக்கின்றார். இன்று ஊடகங்கள் வழியாக உலகச் செய்திகள் சீக்கிரமாய் பரந்து செல்வதைப் போல, தேவ அழைப்பை பெற்றவர்களுடைய வாழ்க்கையைக் குறித்த காரியங்களும் துரிதமாக செல்கின்றது. அவைகளிலே நன்மை யும், தேவனுக்கு பிரியமுமான செய்திகளை கேட்பதைப் பார்க்கிலும், இன்று சிலர், மற்றய தேவ பிள்ளைகளுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுகளை குறித்து தகவல்களை அதிகதிகமாக படிக்கின்றார்கள், கேட்கின்றார்கள், பார்க்கின்றார்கள். தங்களுடைய சபையை மறந்து, மற்ற சபைகளின் குறைகளையே பற்றிப் அறிய ஆவலாக இருக்கின்றார்கள். தங்கள் குடும்பத்தின் குறைகளை பராமுகமாகவிட்டுவிட்டு, மற்றய குடும்பங்களின் குறைகளை காண்கின்றார்கள். தேவ வசனத்தை கேட்டு, அதை தாங்கள் கைக்கொள்ளுவதில் நேரத்தை செலவு செய்வதைவிட, தேவ வசனத்தை கேட்டு அதை கைகொள்ளாமல் இருக்கின்ற மற்றய விசுவாசிகளை பற்றி அதிக கரிசணையுள்ளவர்களாக மாறிவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, இது தேவன் நமக்கு ஏற்படுத்திய அழைப்பு அல்லவே. முதலாவதாக, நான் திருவசனத்தை கேட்கின்றவனாக மாத்திரமல்ல, அதைக் கைகொள்கின்றவனாகவும் வாழ வேண்டும். என் கண்ணிலுள்ள விட்டத்தை மறந்து, அயலவனுடைய கண்களிலுள்ள துரும்பை நோக்கிப் பார்க்கக் கூடாது. நிற்கின்ற நான் விழுந்து போகாமல், என் நடையை காத்துக்கொள்ள வேண்டும். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் மற்றவர்களை குறித்து அறிகின்ற அறிவிலல்ல தேவனைக் குறித்து அறிகின்ற அறிவிலேயே வளரவேண்டும். மற்றவர்கள்வளர வேண்டிய காரியங்களை குறித்து நொந்து கொள்வதற்கு முன்பதாக, நாம் வளர வேண்டிய காரியங்களை குறித்து நாம் ஆராய்ந்து பார் த்து கர்த்தரிடம் சேர்ந்து கொள்வோமாக.

**மத்தேயு 7:3**

**நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன்கண்ணிலிருக் கிற துரும்பைப்பார்க்கிறதென்ன?**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கென்று என்னை அழைத்த தேவனே, நான் பெற்ற உன்னதமாக அழைப்பை மறந்து, மற்றவர்களுடைய குறைகளை கண்டுபிடிப்பவனாக மாறிவிடாதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அவனைவிட நான் நல்லவன்?

வாக்குவாதத்தை ஆரம்பித்தவன் நான் அல்ல. அதற்கு என் நண்பர்கள் சாட்சி. சில ஆசிரியர்களும் அதை அறிந்திருக்கின்றார்கள். காரியம் அப்படியிருக்க, நான் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நீங்கள் கூறுவது நியாயமல்ல. குழப்பத்தை ஏற்படுத்திய மற்றய மாணவர்களே் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று ஒரு பாடசாலை மாணவனானவன் தன் தகப்பனானவரிடம் கூறிக் கொண் டான். அதற்கு தகப்பனானவர்: மகனே, நீ குற்றம் ஏதும் செய்தாயா என்று கேட்டார். அதற்கு மகனானவன்: நான் செய்ததைவிட மற்றய மாணவர்கள் செய்ததே பெரிய குற்றம் என்று பதி லளித்தான். அதற்கு தகப்பனானவர்: மகனே, மற்றவர்கள் அல்ல நீயே என்னுடைய வாரிசு. நீ தான் என்னு டைய பெயரை தரித்திருக்கின்றாய். மற்றவர்கள் பெரிதான குற்றங் களை செய்தாலும், நீ உன் நடக்கை யையும், உன் வார்த்தைப் பிரயோகத்தையும் காத்துக் கொண்டிருக்க வேண்டும். நாளைக்கு நீ என்னோடு அதிபருடைய காரியாலயத்திற்கு வந்து, உன்னுடைய நெறியற்ற நடத்தைக்காக மன்னிப்பை பெற்றுக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று கூறினார். பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவ தினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரி தென்று பாருங்கள். சில வேளைகளிலே, தேவ பிள்ளைகள், தங்கள் குற்றங்களை ஒப்பிட்டு பேசிக் கொள்வார்கள். எடுத்துக் காட்டாக: சகோ தரனே, நீ ஏன் கெட்ட வார்த்தைகளால் உன் அயலவனைக் கடிந்து கொண்டாய் என்று ஒரு மூப்பரானவர் ஒரு விசுவாசியிடம் கேட்டார். அதற்கு அந்த விசுவாசியானவன்: அந்த அயலவன் பேசாத வார்த்தை யையா நான் பேசிவிட்டேன். அவனுடைய சிந்தையானது கெட்ட வார்த்தைக ளினாலே நிறைந்திருக்கின்றது என்று கூறினான். அதற்கு அந்த மூப்பரா னவர்: அவன் கர்த்தரை அறியாதவன். தன் சிந்தைக்கு எட்டியதை செய் தான். ஆனால் நீயோ கர்த்தருடைய அன்பை ருசிபார்த்தவன். அவரு டைய பிள்ளையாக இருக்கின்றாய். இருளில் இருக்கும் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்க வேண்டியவன். சாரமற்ற பூமிக்கு உப்பாக திகழ வேண்டியவன். உன் நடக்கையை பார்த்து, உன் அயலவன் பரம பிதாவை மகிமைப்படுத்த வேண்டும் என்று கூறினார். ஆம், நாமும் உன்னதமான தேவ அழைப்புக்கு பாத்திரர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

**மத்தேயு 5:16**

இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிரு க்கிறஉங்கள் பிதாவை மகி மைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன் பாகப் பிரகாசிக்கக்கடவது

**ஜெபம்**: உன்னதமான தேவனே, பரிசுத்த வாழ்வு வாழும்படிக்கு வேறுபிரித்தவரே, என்னுடைய நற்கிரியைகள் வழியாக உம்முடைய நாமம் மகிமைப்படுத்படிக்கு நான் உணர்வுள்ள வாழ்க்கை வாழ உதவி செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மட்பாண்டங்கள்

ஒரு கிராமமொன்றிலே, சில சிறு பிள்ளைகள் சேர்ந்து ஒரு மண்குடத்திற்குள்ளே தண்ணீர் ஊற்றி விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தண்ணீரை அதற்குள்ளே ஊற்றிய பின்பு, அரிசி போட்டு, சோறு சமைப்பது போல, மண்ணை எடுத்து அந்தக் குடத்துக்குள் போட்டார்கள். மண்ணோடு சேர்ந்து அழுக்குகளும் அதற்குள்ளே போயிற்று. சோற்றுக்கு உப்பு போடுவது போல, சிறியகற்களை எடுத்த அதற்குள்ளே போட்டு, நிலத்தில் கிடைந்த ஒரு தடியை எடுத்து, அகப்பை போல குடத்திற்குள் போட்டு துலாவிக் கொண்டிருந்தார்கள்.பிரியமானவர்களே, நாமும் மண்ணால் செய்யப்பட்ட குடத்தைப் போல இருக் கின்றோம். வாழநாள் குறைந்ததும், வரு த்தம் நிறைந்ததுமான மனித வாழ்க்கையின் வருடங்களிலே, நம்முடைய இந்த மட்குடத்திற்குள் அநேக காரியங்களால் நிரப்பிக் கொள்கின்றோம். சிறு பிள்ளைகள் அறியாமையுள்ளவர்கள். மதியீனம் அவர்கள் மனதை ஒட்டிக் கொள்வதைப் போல, தேவனை அறியாமல், இந்த உலகத்தின் போக்கின்படி வாழ்கின்றவர்கள். தங்கள் சிந்தையை இந்த உலகத்திலுண்டானவைகளால் நிரப்பிக் கொள்கின்றார்கள். நெறிகெட்டதும், களியாட்டம் நிறைந்ததுமான திரைப்படங்களிலுள்ள கதை வசனங்களினாலும், பாடல்களினாலும், பல காட்சிகளினாலும் தம்மை நிறைத்துக் கொள்கின்றார்கள். பானையிலே உள்ளதுதான் அகப்பையிலே வரும் என்ற பழமொழிக்கடங்க, ஆபத்து அவர்களை சூழ்ந்து கொள்ளும் போதும், இக்கட்டும் நெருக்கமும் சூழ்ந்து கொள்ளும் போதும், அவர்கள் எதினால் சிந்தையை நிறைத்தார்களோ, அவை அவர்களிடமிருந்து வெளிப்படும். ஆனால், அவர்கள் தேவனை அறியாததால் அப்படி செய்கின்றார்கள். ஒருவேளை அவர்கள் தேவனை அறியும் போது, மேன்மையாவைகளை நாடித் தேடுவார்கள். ஆனால், தேவனை அறிந்து, தேவ பிள்ளைகள் என்ற நாமத்தை தரித்தவர்கள், இன்று தங்கள் சிந்தைகளை, மட்குடத்தை மண்ணாலும், அழுக்குகளால் நிறைத்த அந்த சிறு பிள்ளைகளைப் போல, இந்த உலகத்தின் திரைப் படங்களாலும், களியாட்டங்களினாலும், நெறிகெட்ட பாடல்களினாலும், கதை வசனங்களினாலும் நிறைத்துக் கொள்கின்றார்கள். இது அறியாமையல்ல, இது துணிகரம் கொள்ளுலுதல். இதனால் இக்கட்டு நாட்களில் தேவனை தேடியும் கண்டடையாமற் போகின்றார்கள். நாமோ அவ்வண்ணமாக இராமல், தேவ பயத்தோடு நம்முடைய பரிசுத்த வாழ்க்கையை காத்துக் கொள்வோமாக.

**2 கொரிந்தியர் 7:1**

பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழ என்னை பிரித்தெடுத்த தேவனே, இந்த பூமியில் வாழும் நாட்களிலே நான் உம்மை அறிகின்ற அறிவினாலே நிறைந்து பெருக எனக்கு உம்முடைய ஞானத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.